# சக்தி

மலர்: 5, காலாண்டு இதழ்: 5-6




சமாதானம்
அபிவிருத்தி
ஒருமைப்பாடு
மதுவிலக்கு
சனநாயகம்

NG.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே .....

சக்தி டிசெம்பர் 2000 உள்ளடக்கம்


➢போரூட் யாழ் மேற்கு இணைப்பாளர் "தினக்குரலு"க்கு அளித்த பேட்டி

➢போரூட் நிறுவனத்தின் சிறப்பான பணிகள்

➢போரூட்டின் புனரமைப்பு வேலைகள்

➢சிறப்புக் கட்டுரை "மதுவும் மனிதனும்"

➢கசிப்பு................ இதை ஒழிக்க வழி?

➢ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமனாக வாழ்தல்

➢கவிதைப் பூங்கா.


செய்தி

## "கிரமின் வங்கி"க்கு மகாத்மா காந்தி விருது

2000 ஆண்டுக்கான மகாத்மா காந்தி சமாதான விருது பங்களாதேசில் உள்ள கிராமின் வங்கிக்கும் தென் ஆபிரிக்க சுதந்திரப் போராட்டத் தலைவர் நெல்சன் மண்டேலாவிற்கும் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வங்கி மிகவும் ஏழ்மையான ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அவர்களுடைய சேமிப்பைப் பயன்படுத்தி இலகுவான முறையில் ( பிணை முதலியன இன்றி ) பொருளாதார செயற்பாட்டு வறுமை ஒழிப்பு வேலைகளுக்கு கடன் வழங்குகின்றது. இந்த வங்கிகள் அம்மக்களாலேயே நிர்வகிக்கப்படுகின்றன.

போரூட் தற்போது அமுலாக்கி வரும் சேமிப்புக்கடன் திட்டங்கள் கிராமின் வங்கியின் அடிப்படையைக் கொண்டவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/800/4618

December 1,2000

# A note of Introduction

**I am really happy to write a note of introduction to " Sakthi " tamil magazine published by FORUT,Jaffna West.**

**This Decmber, 2000 issue contains valuable articles and focuses on such subjects as alcohol, war and social problems. It is hoped that the magazine will benefit the readers in widening their knowledge and equipping them well to fight especially the evils of alcohol.**

**It is noted with pleasure and certain amount of pride that most of the contributions came from volunteers making the magazine more homely and lively.**

**I have to specially mention with thanks the contribution made by Mr. S. Rajendran under the title " Alcohol and Man ". He deals with the subject extensively in a clear cut way and in simple language. There is no doubt that this article will help many anti-alcohol fighters.**

**I take this opportunity to thak all who contributed to bring out this magazine and my special thanks are due to Mr. V. Sinnathamby ( Bharathy Nesan ) for his uinhesistant and enthusiastic assistance in editing the magazine.**

**K.Gunendradasan,**
**Project Coordinator, FORUT Jaffna West.**

02-01-2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழ் ஆசிரியர் குறிப்புகள்

அன்பான வாசகர்களே!

போரூட் வலிமேற்கு வெளியிடும் "சக்தி" 2000 டிசெம்பர் இதழ் உங்கள் கரங்களில் தவழ்கிறது.

போரூட்டின் சிறப்பான பணிகள் பற்றிய கட்டுரையும் வலிமேற்கு திட்ட இணைப்பாளர் திரு.க.குணேந்திரதாசனின் பேட்டியும் இதழை அலங்கரிக்கின்றன.

அத்துடன் மது ஒழிப்புப் பற்றிய சாந்திகம் உளவளத் துணையாளர் திரு. சோ.இராசேந்திரன் "மதுவும் மனிதனும்" என்ற தலைப்பில் அறிவும் அனுபவமும் நிறைந்த சிறப்பான ஆய்வுக்கட்டுரை ஒன்றை "சக்தி" இதழுக்கெனப் பிரத்தியேகமாகப் படைத்து அளித்துள்ளார்

மேலும் கவிதைப்பூங்கா ஒன்றும் உங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது.

"சக்தி" இதழை வெளியிட உதவிய சகலருக்கும் ஆக்கங்களைப் படைத்த அன்பர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாரதிநேசன் சின்னத்தம்பி
இதழாசிரியர்

### போரூட் யாழ் மேற்கு அலுவலர்கள்

| இல | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | க. குணேந்திரதாசன் | திட்ட இணைப்பாளர் |
| 02 | ந. தவராஜகுமார் | சிரேஷ்டசமூகஅபிவிருத்தி இணைப்பாளர் |
| 03 | வே. நடுநாயகமூர்த்தி | சிரேஷ்டசமூகஅபிவிருத்தி இணைப்பாளர் |
| 04 | ப. தவமணி | சமூக அபிவிருத்தி இணைப்பாளர் |
| 05 | அ. புஸ்பராணி | சமூக அபிவிருத்தி உதவியாளர் |
| 06 | சி. சுதந்தினி | சமூக அபிவிருத்தி உதவியாளர் |
| 07 | த. சுமதி | கணக்கு பதியுனர் |
| 08 | க. சந்திரகலா | பொது இலிகிதர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரருட்டே நீ வாழி

புண்பான சேவைகளால்
பாமர மக்களையும் பயனுறச் செய்து
வறியோரின் விளக்கொளியாய்
வழிகாட்டும் போருட்டே நீ வாழி !

ஏழை மக்களின் தோழனாகி
பாழும் பேதமைகள் நீக்க
நாளும் பொழுதும் உழைக்கும்
நல்ல நிறுவனமே போருட்டே நீ வாழி !

மண் குடிசையை மனையாக மாற்ற
எண்ணிலாத் திட்டம் நடத்தி
பண்புடன் பாரினில் வலம் வரும்
திண்ணிய போருட்டே நீ வாழி !

சி. லயன்ஸ்றீக்கா
பற்றிமா வீதி,
பண்டத்தரிப்பு.

## இந்நிலை அகற்ற உழைப்போம் !

இந்து மா கடலின் நித்திலமாம்
இலங்கா புரி எம் திருநாடாம்
சிந்து நதிக்கரை தோன்றியதாம்
சீருயர் எம்மவர் பண்பாடார்
சிங்கள தமிழர் சோனகரும்
சிறப்புயர் பறங்கியர் சோதரர் போல்
மங்கள வளமுடன் ஒன்றுபட்டே
மாநிலம் போற்றிட வாழ்ந்தோமே.

இப்படி வாழ்ந்த எம்மிடையே
இனப்பகை வந்தது எவ்வாறோ
எப்படியாயினும் இந் நிலையை
எளிதே அகற்ற இணைந்தே நாம்
பல்லின மக்களும் உழைப்போமே
பகைமை என்றும் வெறுப்போமே
நலவள நாட்டு மக்களென
நானிலம் போற்ற நடப்போமே

பு.கோபிநாத்,
அளவெட்டி மேற்கு, முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரூட் யாழ் மேற்கு திட்ட இணைப்பாளர் "தினக்குரலுக்கு" அளித்த பேட்டி

"என்.ஜி.ஓ" என்பது இன்று இலங்கையில் பலரும் அறிந்த பதமாகி உள்ளது. அரசசார்பற்ற நிறுவனங்கள் என்று அர்த்தப்படும் இந்தப் பதத்துக்குப் பின்னால் எமது மக்களின் நல்வாழ்விற்கான நம்பிக்கைகளும் ஒருவகையில் இணைந்து இருக்கின்றன. அதேவேளையில் என்.ஜி.ஓ க்கள் பற்றி சந்தேகங்களும் அச்சங்களும் இல்லாமல் இல்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். வேளிநாட்டு மூலதனக்காரரின் கருவிகளாக அவை செயற்படுகின்றன என்று கருதப்படுவதை நாம் அறிவோம். இந்த குற்றச்சாட்டைப் பொறுத்து ஒரு விஷயத்தின் இரண்டு பக்கங்களையும் பார்க்கவும். அதன் நல்ல பக்கத்தைப் பயன்படுத்தவும், கூர்மையாக்கவும் நாம் பழகிக்கொள்ள வேண்டும் என்று நான் கூறுவேன். இலங்கை மட்டும் அல்ல, உலகம் பூராவிலும் நல்லெண்ணம் படைத்த மக்களும் வாழ்கின்றார்கள். சுயநலமும் அந்தரங்க நோக்கமும் உடைய மக்களும் வாழ்கின்றார்கள். நல்லெண்ணம் படைத்தோர் மனிதாபிமான உணர்வு நிரம்பியவர்களாக இருக்கின்றார்கள் இவர்கள் உலகில் எங்கு அநியாயம் இடம்பெற்றாலும், கஷ்டங்கள் ஏற்பட்டாலும் அனுதாபப்பட்டு தம்மால் இயன்ற உதவிகளை செய்ய முன் வருகின்றார்கள்.

போரூட்டைப் பொறுத்தவரை மேற்கூறிய கணிப்பு மிகுதியும் பொருத்தமானது. போரூட் என்ற அரசசார்பற்ற நிறுவனத்தின் யாழ்ப்பாணம் மேற்கு திட்ட இணைப்பாளரான க.குணேந்திரதாசன் "தினக்குரலுக்கு" அளித்த சிறப்புப் பேட்டி ஒன்றில் இவ்வாறு கூறினார். யாழ்ப்பாணத்தில் போரூட்டின் செயற்பாடுகள் பற்றி குணேந்திரதாசன் விளக்கமாக பதில்களை அளித்தார். யாழ்ப்பாணத்தில் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆற்றி வரும்பணிகளைப் பற்றி அறியவும் அவருடைய பேட்டி பயனுள்ளதாக அமைகிறது.

கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தமது ஆரம்பகால அறிவுப் பயிற்சிகளையும் ஸ்தாபனப் பயிற்சிகளையும் பெற்ற க.குணேந்திரதாசன் சோவியத் யூனியனில் 3 ஆண்டுகளாக சமூக விஞ்ஞானத்துறையில் கல்வி கற்றவர். இதனால் அவர் பெற்றுள்ள ஏழை மக்கள் சார்பான மனோபாவமும் போரூட் பணிகளில் அவருக்குப் பெரிதும் உதவுகின்றன என்று கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாவில் திட்ட இணைப்பாளராக இருந்தபோது அவர் கிராமிய மக்கள் மத்தியில் புத்தம் புதியதோர் சேமிப்பு இயக்கத்தை ஸ்தாபனப் படுத்துவதில் பெரும் வெற்றி கண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவருடைய பேட்டி இதோ!

## சீநோர் நிறுவனத்துடன் ஆரம்பித்த பணிகள்

கேள்வி:- போருட் ஸ்தாபனம், அதன் வழிகாட்டும் கொள்கைகள் ஆகியன பற்றி கூறமுடியுமா?

பதில்:- போருட் ஸ்தாபனத்தின் சார்பில் பதில் அளிக்க நான் எவ்வளவுக்குத் தகுதி உடையவன் என்பது எனக்குத் தெரியாது. ஏனெனில் இலங்கையில் போருட் பல்வேறு பகுதிகளிலும் வேலை செய்கின்றது. நான் அவ்வாறான பரந்துபட்ட திட்டத்தின் ஒரு திட்ட இணைப்பாளராகவே கடமையாற்றுகின்றேன். போருட்டில் பத்தாண்டு காலம் பணிசெய்த காரணத்தாலும் அபிவிருத்தி சிந்தனைப் போக்கை சுரண்டப்படுகின்ற ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட மக்கள் மத்தியில் நாடளாவிய ரீதியில் தூண்டும் நோக்குடனும் பதிலளிக்கத் துணிகின்றேன்.

போருட்டின் முன்னோடி தாபனமாக சர்வதேச நல்லொழுக்க ஸ்தாபனம் 1851இல் அமெரிக்காவில் தாபிக்கப்பட்டு நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளில் ஒரு மக்கள் இயக்கமாக உருவெடுத்தது. ஆரம்ப காலத்தில் இந்தத் தாபனம் மதுபாவனையால் சமூகத்தில் ஏற்பட்ட சீரழிவை எதிர்த்துப் போராடியது. சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட மக்களுடனான ஒருமைப்பாட்டு இயக்கமாக வளர்ந்தது.

இலங்கையில் போருட் தாபனத்தின் வேலைகள் உத்தியோக பூர்வமாக 1981இல் ஆரம்பித்தன. ஆனால் சர்வதேச நல்லொழுக்க தாபனத்தின் நோர்வே இளைஞர்கள் அமைப்பு அதன் அபிவிருத்திப் பணிகளை 1967 லேயே ஆரம்பித்து விட்டது. இதன் விளைவாக சீநோர் அபிவிருத்தி நிறுவனம் யாழ்ப்பாண காரைநகரில் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் கண்ணாடி, இழைப்படகு, வலைத்தொழிற்சாலைகள் ஆகியன நிறுவப்பட்டு மீன்பிடித்துறையில் புதிய தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்டு அதில் பாரிய அபிவிருத்தி ஏற்பட்டது.

அபிவிருத்தி அடையாத நாடுகளில், முன்னேற்றத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குலகத் தொழில்நுட்பத்தின் மூலம் ஏற்படுத்தலாம் என்ற அக்கால அபிவிருத்தி சிந்தனைக்கு மாறாக அமைந்தது சீனோர் அபிவிருத்தி முயற்சி. உலகில் செல்வம் அநீதியான முறையில் பங்கிடப்பட்டு இருக்கிறது, இதைக் கவனியாமல் விட முடியாது. சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும், இந்த சிந்தனைப்போக்கின் விளைவே சீனோர் அபிவிருத்தி நிறுவனமாகும்.

## போருட்டின் வேறுபட்ட பணி.

கேள்வி:-பொதுவாக இலங்கையில் போருட்டின் செயற்பாடு எப்பொழுது ஆரம்பித்தது? அதன் சிறப்பம்சங்கள், அதாவது மற்ற அரசசார்பற்ற நிறுவனங்களுடன் ஒப்பிடும்போது அதன் வேறுபட்ட பணிகள் யாவை?

பதில்:-சீனோர் நிறுவனம் 1967 இல் காரைநகரில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சிதான் போருட் நிறுவனத்தின் செயற்பாட்டின் ஆரம்பமாகும். ஒவ்வொரு அரசசார்பற்ற நிறுவனத்துக்கும் அதற்கே உரித்தான குறிக்கோள்கள், நோக்கங்கள், கொள்கைகள் ஆகியன உள்ளன. ஆகவே போருட்டின் குறிக்கோள்கள், நோக்கங்கள், கொள்கைகள் ஆகியவற்றை விளங்கிக் கொண்டால் அது மற்றவற்றுடன் எவ்வளவுக்கு வேறுபடுகின்றது, எவ்வளவுக்கு ஒத்துப்போகிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

முதலாவதாக மேற்குலகத் தொழில்நுட்பப் பரிமாற்றம் எவ்வகையான தாக்கத்தை வளர்முக நாடுகளில் ஏற்படுத்தியுள்ளது என்பதைப் பார்ப்போம். முதலாளித்துவத் தனிச் சொத்துடமை அடிப்படையில் வளர்ச்சியடைகின்ற நாடுகளில் சுரண்டல், ஒடுக்குமுறை, இராணுவ வல்லாதிக்கம் ஆகியவற்றால் செல்வம் ஒரு சாராரிடம் குவியும் நிலை உள்ளது. சமூகத்தின் பெரும்பாலான மக்கள் ஓரங்கட்டப்படுகின்றனர். முதலாளித்துவ நாடுகள், சர்வதேச வர்க்கத்தின் ஏற்றத்தாழ்வை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் தம்மை வலுப்படுத்துகின்றன. இதன் காரணமாக மனித உரிமைகளும் ஜனநாயகமும் மீறப்படுகின்றன.

இப்போக்குக்கு எதிராக சிந்திக்கின்ற சக்திகள் உலகம் பூராவும் இருக்கின்றன. அவை தாம் இன்று அனுபவிக்கின்ற நன்மைகள் காலம் காலமாக நடத்தப்பட்ட போராட்டங்களின் விளைவே எனச் சிந்திக்கின்றன. போருட்டின் பின்னணி இதுவாகும். ஆகவே இந்நிகழ்வுப்போக்கு வளர்முக நாடுகளில் அநீதியான சமூக அமைப்புக்கு எதிராகச் செயற்பட வேண்டும் என்பதில் அக்கறையாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே நிதி நிறுவனங்களையும் ஆதிக்க அமைப்புக்களையும் வலுப்படுத்துவதற்கு மாறாக மக்கள் அமைப்புக்களை வலுப்படுத்துவதில் போருட் கவனம் செலுத்துகிறது.

நான் நினைக்கிறேன், இன்றைய சமுதாய பிரச்சினைகளில் பிரதான பிரச்சினையான வறுமை 'சமூக விருத்தியின்" ஓர் விளைவே. ஆகவே பாதிக்கப்பட்ட மக்கள் தற்போதைய சமூக தாபனங்களினால் ஓரங்கட்டப்பட்ட மக்கள் தமது நிலையை மேம்படுத்துவதற்காக தாபனங்களை அமைப்பது இயற்கை நிகழ்வுப் போக்கே இது ஓர் நீதியான சமூகத்தை அமைப்பதற்கான சமூகப்போராட்டமே. ஆகவே ஒடுக்கப்பட்ட மக்களின் ஜனநாயக வளர்ச்சிக்கும் சமூக ஜனநாயக வளர்ச்சிக்கும் மக்களின் தாபனங்களை அமைப்பதும் வலுப்படுத்தவும் இன்றியமையாதது. இப்பணியைச் செய்வதன்மூலமும் நீதியற்ற அமைப்பை பாதுகாக்கின்ற தாபனங்களிற்குப் பதிலாக மக்கள் அமைப்புக்களைப் பங்கேற்கச் செய்வதன் மூலமும் செயலாற்றுவதால் போருட் நிறுவனம் மற்றைய அரசசார்பற்ற நிறுவனங்களின் இருந்து வேறுபடுகின்றது.

**யாழ்ப்பாணத்தில் போருட் பணிகள்:**

கேள்வி:-யாழ்ப்பாணத்தில் போருட் கடந்த காலத்தில் எத்தகைய பணிகளில் ஈடுபட்டது? தற்பொழுது யாழ்ப்பாணத்திலான நடவடிக்கைகளில் முக்கிய குறிக்கோள்கள் யாவை?

பதில்:- சீநோர் ஸ்தாபனம் ஆரம்பித்த நாட்களில் இருந்து போருட் யாழ்ப்பாணத்தில் அதன் பணியை மேற்கொண்டு வருகின்றது. 1982 ஆம் ஆண்டில் இருந்த தொழிற்சாலையை விரிவுபடுத்துவதற்குப் பதிலாக ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட மக்களின் உரிமைபாட்டை முன்நிபந்தனையாகக் கொண்ட சமூக அபிவிருத்தித்துறையில் அதன் கவனத்தைச் செலுத்தியது. யுத்தம் ஆரம்பித்த காலம் முதல் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிவாரண நடவடிக்கைகளையும் தற்போது புனர்நிர்மாண, புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் முக்கியத்துவம் கொடுத்து செயற்படுத்தி வருகின்றது.

கேள்வி:-இலங்கையில் கடந்த 20 ஆண்டுகளாக நிலவி வரும் போர் நிலைமை போருட் வேலைகளை எவ்வாறு பாதித்துள்ளது?

பதில்:-நாங்கள் பூரணமாக போருக்கு எதிரானவர்கள், போரில் ஈடுபட்டுள்ள இரண்டு சக்திகளுக்கும் இடையில் நடுநிலமை வகிக்கின்றோம். அதேவேளையில் போரால் பாதிக்கப்பட்ட மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது வாழ்க்கையைக் கட்டி எழுப்புவதற்கான மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். ஆகவேதான் இராணுவத்தின் கட்டுப்பாடுள்ள பகுதியிலும், கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் எம்மால் வேலை செய்ய முடிகின்றது. மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு இடம்பெயர்ந்த போது நாமும் இடம்பெயர்ந்தே பணியாற்றினோம்.

கேள்வி:-இன்று யாழ்ப்பாணத்தில் போரூட் மேற்கொண்டுள்ள பணிகளைப் பற்றிய விபரத்தை தரமுடியுமா?

பதில்:- தற்போது நாம் புனர்நிர்மாண, புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து வருகின்றோம். எமது செயற்பாடுகள் எமது இலக்குக்குழு மக்களின் தாபன விருத்தியை மையமாகக் கொண்டு அமைக்கப்படுகின்றன.

பிரதானமாக வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களுக்கும் வலுவிழந்த குடும்பங்களுக்கும் தெரிவு செய்யப்பட்ட ஏறத்தாழ 50 ற்கு மேற்பட்ட கிராமங்களில் வீடு, மலசலகூட வசதி, குடிநீர் வசதி, பாலர்பாடசாலை, பொதுக்கட்டிடங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கும் சேமிப்புக் கடன் திட்டங்களை மேற்கொள்வதற்குமான உதவிகளை அளித்து வருகின்றோம்.

கேள்வி:-தங்களுடைய பொருளாதாரத திட்டங்களின் தன்மை யாது? அவை எவ்வளவுக்கு வெற்றி கண்டுள்ளன?

பதில்:- ஏழை மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்காக வறுமையிலிருந்தும் சுரண்டலிலிருந்தும் அவர்களை விடுவிப்பதற்காக போரூட் நிறுவனம் செயற்படுகின்றது. இதுவே ஆரம்பகாலத்தில் இருந்து அதன் கொள்கையாகும். ஏழை மக்களின் பொருளாதார விருத்திக்காக செயற்பாடுகளைத் தூண்டுவதும், மேம்படுத்துவதும் போரூட்டின் பணியாகும். குறிப்பாகச் சொல்லப்போனால் ஏழைகளின் தற்போதைய நிலைமைக்கான காரணம் அவர்கள் மத்தியில் வலுவான அமைப்புக்கள் இல்லாமையும் நம்பிக்கை வைத்து அவர்கள் செயற்படாமல் இருப்பதும் ஆகும். இந்த அமைப்புகளுக்கான வளங்கள் ஒன்று திரட்டப்படாமல் இருப்பதும் இந்த மக்கள் தமது உண்மையான சக்தியை அறியமால் இருப்பதும் அவர்களுடைய இன்றைய நிலமைக்கு இன்னொரு காரணமாகும்.

இந்த ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவின் அபிவிருத்தி அம்மக்களின் முயற்சி ஆர்வம் மூலமே ஏற்பட வேண்டும். எம்போன்ற தாபனங்கள் அபிவிருத்தியை தூண்ட முடியுமே தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மக்களுக்காக செயற்பட இயலாது. இத்திட்டங்களில் எமக்கு வெற்றியும் ஏற்பட்டுள்ளது, தோல்வியும் ஏற்பட்டுள்ளது. மக்களுடைய பொருளாதார மேம்பாட்டுக்காக உழைப்பதில் தமது வளத்திலேயே தங்கியிருக்கும் நம்பிக்கையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி இருக்கின்றோம். மக்களின் நிதி நிர்வாகத்திறன், தீர்மானம் எடுத்தலில் பங்கேற்கும் திறன் ஆகியவற்றை கட்டியெழுப்பியுள்ளோம்.

போர் சமூகக்காரணிகள் எமது செயற்பாட்டுக்கு தடையாக இருந்தன, இருக்கின்றன. மக்கள் மத்தியிலுள்ள நம்பிக்கையீனம் சமூக ஒழுங்கீனம் ஆகியவையும் எமது முன்னேற்றத்திற்கு தடையாக அமைந்துள்ளன.

கேள்வி:-மதுவிலக்கு புகைபிடித்தலைத் தடுத்தலாகிய கலாச்சார ரீதியான செயல்களில் ஈடுபடும் போரூட் இந்த இலக்குகளை அடையப்பெற என்ன வழிகளை மேற்கொள்கிறது?

பதில்:- மதுவிலக்கு, புகைத்தல் போன்ற பிரச்சினைகள் சகல நாடுகளிலும் சமூகங்களிலும் ஏற்படுத்தும் தீய விளைவுகள் பற்றி எம்மத்தியில் கருத்து வித்தியாசம் இருக்க முடியாது. அதன் தாக்கம் குறிப்பாக ஏழை மக்கள் மத்தியில் தான் அதிகமாக உள்ளது. இதை ஒரு பொது விதியாகவே கொள்ளலாம். சமூக ஒடுக்குமுறை, சமூக முன்னேற்றத்திற்கான வழியேதுமின்மை ஆகியவற்றில் இருந்து விடுபடுவதற்கான வழியாக இது ஏழை மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இந்நிலையை உணர்த்துவதும் அதை மாற்றியமைப்பதற்காக ஆக்க பூர்வமாக சமூக உணர்வுள்ள செயற்பாட்டுக்கு வழிசமைப்பதும் எமது பணியாகும்.

## போரூட் எதிர்நோக்கும் சவால்கள்:

கேள்வி:-யாழ்ப்பாண மக்களின் புனர்வாழ்விலும் யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தியிலும் உதவி புரிவதில் போரூட் எதிர்நோக்கும் சவால்கள் யாவை?

பதில்:- பிரதானமாக அபிவிருத்தி, புனர்வாழ்வுப்பணிகளில் மக்களின் பங்கேற்றலை விருத்தி செய்வதை முக்கிய சவாலாகக் கருதுகின்றோம். உண்மையிலேயே மக்கள் அரச நிறுவனங்களில் மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை தங்கி வாழும் நிலையே உள்ளது. தீர்மானம் எடுத்தல், நிறைவேற்றல், கண்காணித்தல், மதிப்பிடுதல் ஆகிய பணிகளில் மக்களுக்கு எவ்வித ஈடுபாடும் கிடையாது. உண்மையில் மக்கள் தமது எதிர்காலத்தைக் கட்டி எழுப்பும் பணியில் தாமே தீர்மானம் எடுக்க வல்லவர்களாக இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும. இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட நாம் சகல அரசசார்பற்ற நிறுவனங்களுடன் நல்லுறவைப் பேண விரும்புகின்றோம். மக்களுடன் நல்லுறவைக் கட்டி எழுப்புவதுடன் மக்களை சக்திப்படுத்த முயற்சிக்கின்றோம். அவ்வப்போது அதிகாரவர்க்க சிந்தனை செயற்பாடுகளுடன் எமக்கு முரண்பாடு ஏற்படுவதும் உண்டு.

கேள்வி:-சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதில் போருட்டின் பங்கு பலன் அளித்துள்ளதா?

பதில்:-இக்கேள்விக்கான விடையை அளிப்பதற்குவல்லவர்கள் எமது திட்டங்களினால் நன்மை பெற்ற மக்களே, சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்துவதிலும் அதன் வெற்றியையும் தீர்மானிக்கும் காரணிகள் பல உள்ளன. அவற்றில் தொழில் பயிற்சிக்கடன், வளங்களை திரட்டுவதிலும் சமூக நோக்குள்ள தாபனங்களை உருவாக்குவதிலும் ஈடுபட்டுள்ளோம். போருக்கு முற்பட்ட காலத்தில் மக்களின் தொழில் விருத்திக்கு எமது சேமிப்புத் திட்டம் பல்வேறு பங்களிப்பைச் செய்துள்ளது. இதில் முக்கியமானது யாதெனில் மக்களின் நேர்மையான முயற்சிகளை ஒன்றிணைப்பதுதான். வெளியில் இருந்து கிடைக்கும் உதவிகளைப் பாவித்து ஒரு சிலரை வசதி படைத்தவர் ஆக்குவது எமது நோக்கமல்ல. முழு சமூகத்திற்கும் பயன்படக்கூடிய வகையில் சுழற்சி முறையில் பாவிக்கக் கூடியதும் நிர்வகிக்கக் கூடியதுமான நேர்மையான சமூக தாபனங்களைக் கட்டியெழுப்புவதே நிலையான அபிவிருத்திக்கான அடித்தளம் ஆகும்.

## கிராமிய நிதி நிறுவன அமைப்பு:

கேள்வி:-கிராமிய மட்டத்திலான சேமிப்பு இயக்கம் ஒன்றையும் ஸ்தாபிக்கப்பட்ட வங்கிகளையும், நிதிநிறுவனங்களையும் மக்கள் நம்பி இருக்காமல் தாங்களே தங்கள் பணத்தைச் சேமித்து கையாளும் அடிமட்ட இயக்கம் ஒன்றையும் ஆரம்பித்துள்ளதாக அறிகிறோம். அதைப்பற்றி கூறுவீர்களா?

பதில்:- நிதி தற்போதைய சமூகத்தின் அபிவிருத்தியில் பெரும் பங்கை ஆற்றுகிறது. உதாரணமாக தற்போதைய நிதி நிறுவனங்களான வங்கிகள் மக்களின் சேமிப்பால் உருவாகிய தமது நிதி வளத்தை வசதி படைத்தவர்களை மேலும் வசதி படைத்தவர்கள் ஆக்குவதற்குப் பயன்படுத்துகின்றன. ஏழை மக்கள் சேமிக்கலாமே தவிர சேமிப்பைப் பயன்படுத்துவதைத் தீர்மானிக்க முடியாது. தமக்குத் தேவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது கடன்களை அவர்கள் இலேசாகப் பெற முடியாது. பல்வேறு நிபந்தனைகளைப் பூர்த்தியாக்க வேண்டும். இந்நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கான அமைப்புக்களை நிறுவி தமது வளங்களைத் திரட்டித் தாமே நிதியை நிர்வகிக்கின்ற நிலைமைக்காகப் பாடுபடுதல் ஓர் நீதியான போராட்டமே ஆகும். இதில் எமக்கு பல்வேறு வெற்றிகளும் தோல்விகளும் ஏற்படுகின்றன. இப்போராட்டத்தை வலுப்படுத்துவது தவிர இன்றைய நிலையில் வேறுவழி கிடையாது

.

கேள்வி:-போரூட்டின் நீண்டகால எதிர்கால திட்டங்கள் பற்றி கூறமுடியுமா?

பதில்:-எதிர்கால சமூகத்தை செவ்வனே உருவாக்குவதில் தொண்டர் நிறுவனங்கள் முக்கிய பங்காற்ற முடியும். மக்கள் பங்கேற்றல் மூலம் சமாதானம், மதுவிலக்கு, ஒடுக்கப்பட்ட மக்களுடனான உரிமைப்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட நீதியான சமுதாயத்தை உருவாக்குவதே எமது நீண்டகால நோக்காகும். அதற்கு மக்களை சக்தி உடையவர்களாக மாற்றி நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதே எமது செயற்பணியாகும்.

கேள்வி:-போரூட் உலகின் எந்தப் பாகங்களில் பணி புரிகிறது?

பதில்:-போரூட் நிறுவனம் இந்தியா, நேபாளம், மாலைதீவு, சாம்பியா, சியராலியோன், செனகல் ஆகிய நாடுகளில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளது. போரூட் நிறுவனத்தின் மொத்த நிதி ஒதுக்கீட்டின் 61 சதவீதம் இலங்கையில் அபிவிருத்தி பணிகளுக்காக பாவிக்கப்படுகிறது. இதில் பெரும்பகுதி யாழ்ப்பாணப் புனர்வாழ்வு, புனர்நிர்மாண பணிகளுக்காக பயன்படுகிறது.

தினக்குரல் - 13.06.1999,
போட்டி காண்பவர்,
பாரதிநேசன் சின்னத்தம்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனைப் பயன்கள்

பன்னவேலை பண்பாய்ச் செய்திடுவோம்
பாணிப் பனாட்டு பண்பாகச் செய்வோம்
உண்ணக் கிழங்கொடிய லெடுப்போம் - எங்கள்
ஊருக்குள் விற்றுச் சீவித்திடுவோம்

கங்கரித்தே தும்பெடுத்து விற்போம் - மீதி
காய்ந்த பின்பே விறகாக விற்போம்
சங்கையுள நுங்கரிந்து உண்போம் - ஓலைச்
சார்பினிற் சாயங்கள் தோய்த்து விற்போம்.

சாம். டி. தம்புவின்
1938இல் வெளியாகிய
பனைராஜன் நாடகத்திலிருந்து

# அடுத்த ஆண்டுத் திட்டங்கள்

எமது சமூகத்திலே வாழ்க்கை என்னும் நீரோட்டத்தோடு எதிர்நீச்சல் போடமுடியாது தத்தளித்துக் கொண்டும் ஏக்கப்பெருமூச்சுடனும் வாழ்ந்தும் கொண்டிருந்த பின்தங்கிய சராசரி 100 குடும்பங்கள் சமூக மக்களுக்கு உதவிக்கரம் கொடுத்து ஈடேற்றும் பணியினைப் புரிந்து கொண்டிருக்கும் "போருட்" சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கு நாம் என்றும் நன்றியுடையவர்களாவோம்.

காந்திஜி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் எமது மாதகல் கிராமத்தினை எடுத்துக் கொண்டால் 1983ம் ஆண்டு இவ் ஸ்தாபனம் அறிமுகமானது. அன்றைய நடவடிக்கைகள் கல்வி, சுகாதாரம், மதுவிலக்கு என்பனவாகும். இதில் கல்வியே பெரிதும் முக்கியத்துவப்படுத்தப்பட்டது. பாலர் கல்வியுடன் எழுத்தறிவிப்பு வகுப்புமாகும். இதன்மூலம் கல்வியறிவற்ற சிறுவர்களும், இளைஞர்களும் பயனடைந்தனர்.

1985ம் ஆண்டு நல்லொழுக்க சங்கங்கள் கிராமந்தோறும் அமைக்கப்பட்டு அதன் மூலமாகவே இளைஞர்களைக் கொண்டு நடவடிக்கைகளை ஸ்தாபனம் மேற்கொண்டது. சர்வதேச நல்லொழுக்க சங்கத்தின் வடபிராந்திய அமைப்பான வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனமே சங்கங்களை நிர்வகித்தது. பாலர்களுக்கு சத்துணவு வழங்குவதில் மிகுந்த அக்கறை காட்டப்பட்டது. மாலைநேர வகுப்புக்கள், கோழிவளர்ப்பு, விவசாயம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதைப்பொருட்தடுப்பு, சுகாதாரம் இவை பற்றிய வகுப்புக்கள் நடத்தப்பட்டன. பயிற்சி வகுப்புக்களாக பன்னவேலை, தையற்பயிற்சி, மற்றும் கைவேலைகள், சமையற்பாகம் என்பனவும் பயிற்றப்பட்டன.

1990ம் ஆண்டில் புதிய பல கிராமங்களும் உதவிநாடி சங்கங்களை அமைத்துக கொண்டன. 34 கிராமங்கள் சம்மேளனத்தின் கீழ் இயங்கின. இச்சங்கங்கள் மது ஒழிப்பு நடவடிக்கையிலேயே முனைப்பாக ஈடுபட்டு கலைநிகழ்ச்சிகள் கருத்தரங்குகள் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. மாணவருக்கு சிறுவர் நல்லொழுக்க சங்கத்தினை ஏற்படுத்தி இளைய தலைமுறையினரை நற்பிரசைகளாக்கும் பணியில் பலமுயற்சிகள் உருவாக்கப்பட்டன.

எமது கிராமத்தைப் பொறுத்தவரையில் இருவாரங்களுக்கு ஒரு தடவை கூட்டங்கள் நடாத்தப்பட்டன. லொத்தர் முறைமூலம் பரிசில்கள் வழங்கி சிறுவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். அத்தோடு சேமிப்பு பழக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வங்கிப்புத்தகங்களும் வழங்கப்பட்டன. போரூட் ஸ்தாபனத்தினரால் சிறந்தபல நூல்கள் நூலகத்திற்கு வழங்கப்பட்டன. அவற்றுள் சிறுவர்களுக்கு ஏற்ற நூல்களும் அடங்கும். இந்நடவடிக்கையில் அயராது உழைத்தவர்கள் தொண்டர் ஆசிரியர்களும் போரூட் செயல் இணைப்பாளர்களுமேயாகும்

கல்வியறிவுடன் பொருளாதாரத்திலும் முன்னேறினால்தான் கிராமம் முழுமையான வளர்ச்சியடையும் என்ற உயர்ந்த நோக்கில் ஸ்தாபனம் **I.O.G.T** யிடமிருந்து நிதியினைப் பெற்று தொழில் முயற்சிகளுக்கு கடன்வசதிகள் செய்து கொடுத்தது. இதனாற் பலகுடும்பங்கள் பயனடைந்தன. கடந்தகால அசம்பாவிதங்களினால் சகல நடவடிக்கைகளும் பாழடிக்கப்பட்டு பின்னோக்கித் தள்ளப்பட்டனர். யாவற்றையும் இழந்த நிலையில் வெறுங்கையுடன் ஊர்விட்டு ஊர்அலைந்து வன்னிப்பிரதேசம் வரை சென்றுபல இன்னல்களை அனுபவித்து விட்டு தற்போது மீளக்குடியமர்ந்துள்ளனர். இன்னும் பலர் சொந்த இடங்களில் புக முடியாமல் பாதுகாப்புப் படையினரின் எல்லைக்குள் அமைவதால் மீண்டும் இடம்பெயர்ந்தவர்களாகவே வாழும் துர்ப்பாக்கியநிலையிலுள்ளனர்.

கடந்தவருடம் 1999ல் போரூட் சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் சேமிப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மக்களுக்கு வழங்கப்படும் உதவிகள் பயனுள்ளதாக அமைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். பயனாளிகளாக மட்டும் வைக்காமல் பங்காளிகளாகவும் ஆக்க வேண்டும் என்ற உறுதியுடன் தொடக்கப்பட்டுள்ள சேமிப்புக் குழுக்கள் வரவேற்கத்தக்கன. இதன்மூலம் சேமிப்புப் பழக்கம் கட்டாயப்படுத்தப்பட்டு பொறுப்புணர்வும் பிரதிபலிக்கின்றது. ஒருவன் வெறுங்கையுடன் கையை நீட்டினால் அவன் பிச்சைக்காரனாகக் கருதப்படுவான். சுயமுயற்சியில் சிறு தொகையாவது வைத்துக் கொண்டு உதவிக்கரம் நீட்டினால் அவன் பங்குகாரனாகக் கௌரவிக்கப்படுவான். உதவுபவனும் மேன்மையடைவான். "வெறுங்கை முழமிடாது" என்ற முதுமொழியும் இதற்குச் சான்று. போரூட் கிராமங்களில் தொடக்கப்பட்டுள்ள இக்குழுக்களில் தற்போது அனுபவபூர்வமாகவே பயனை உணர்ந்து சகலரும் இணைந்துள்ளனர். இதனால் தமது தேவைகளைக் கேட்கும் உரிமை பெறுகின்றனர். இத்திட்டத்தின் மூலம் அடிப்படைத் தேவைகள் பூரணப்படுத்தப்படுகின்றன. குடியிருப்பதற்கு சிறிய அளவில் வீடு அமைக்க நிதி, சுகாதாரத்தைப் பேணவும், சுற்றுப்புறச்சுழலை தூய்மையானதாக வைத்துக்கொள்ள மலகூடம் அமைக்க நிதி, சுத்தமான நீரைப் பெற்றுக்கொள்ள குழாய்க்கிணறு வசதி என்பன உருவாக்கப்படுகின்றன.

## "போரூட்" நிறுவனத்தின் சிறப்பான பணிகள்

இவ் அபிவிருத்திகளை மேற்கொள்ளும் போது நிதி கட்டங் கட்டமாக வேலைகள் பூர்த்தியான பின்பே வழங்கப்படுவதால் குறிப்பிட்ட தொகைப் பணம் முதலீடாக தேவைப்படுகின்றது. இப்பணத்தை தமது சேமிப்புக் குழுவிடமிருந்து கடனாகப்பெற்றுக் கொண்டு மாதாமாதம் சிறுதொகை வட்டிப்பணத்துடன் தவணைமுறையில் திருப்பிச் செலுத்தும் சலுகையுமுள்ளது. இதனால் யாரிடமும் கடன் கேட்டு அவமானப்படும் அவசியமில்லாமற் போகிறது. "பஞ்சம் போம் பஞ்சத்திற்பட்ட வடுப்போகாது" என்பார்கள்.

அடுத்த ஆண்டுக்கான திட்டங்களில் தோட்டக் காணிகளிலும் குழாய்க்கிணறு அமைக்க உதவி கிடைக்க இருக்கின்றது. அத்தோடு திரும்பவும் கல்வி விடயத்தில் அக்கறை கொண்டு மாலைநேர வகுப்புக்கள் நடாத்துவதோடு மாணவருக்காக 3,000 ரூபா பெறுமதியான புத்தகங்களும் நூலகம் ஊடாக வழங்க முன்வந்துள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்.

எமது நாட்டிலே பல அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் இருந்தபோதிலும், பின்தங்கி வாழும் ஒடுக்கப்பட்டுள்ள சமூக மக்களை முன்னேற்றுவதற்கான முனைப்பான திட்டங்களை முன்னெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியான கண்காணிப்புடன், சேவைமனப்பான்மை கொண்ட கிராம உறுப்பினர்களின் பங்களிப்புடன் இயங்கும் அபிவிருத்தி நிறுவனம் "போரூட்" என்று கூறிக்கொள்வதிற் பெருமிதமடைகின்றோம். இதனால் இந்நிறுவனத்திற் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்.

வறுமைப் புயலில் சிக்கித் தவித்துக் கரையேறத்துடிக்கும் மக்களிற்கு ஒரு கலங்கரை விளக்காக பிரகாசிக்கும் போரூட் வடக்குவானிலே ஒரு விடி வெள்ளி என்று கூறுதல் பொருத்தமானது ஆகும்.

சி. துரைசிங்கம்,
காந்திஜீ நல்லொழுக்க சேமிப்புச் சங்கம்,
மாதகல்.



**போரூட் யாழ் மேற்கு திட்டத்தில் 2000 ஆண்டு நிறைவேறிய புனரமைப்பு வேலைகள்.**

| விபரம் | இடம் | தொகை |
|---|---|---|
| வீடுகள் புதியது | 19 கிராமங்கள் | 206 |
| வீடுகள் திருத்தம் | 03 " | 06 |
| தனியார் மலகூடம் புதியது | 20 " | 171 |
| பொது மலகூடம் " | 06 " | 06 |
| தனியார் கிணறு புதியது | 05 " | 07 |
| தனியார் கிணறு திருத்தம் | 03 " | 06 |
| பொதுக் கிணறு புதியது | 02 " | 02 |
| பொதுக் கிணறு திருத்தம் | 01 " | 01 |
| பாலர்பாடசாலை புதியது | 02 " | 02 |
| பாலர்பாடசாலை திருத்தம் | 01 " | 01 |
| சனசமூகநிலைய கட்டிடம் புதியது | 04 " | 04 |
| சனசமூகநிலைய கட்டிடம் திருத்தம் | 02 " | 02 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க பாடசாலை விபரம்

| இல | புதிய கட்டடம் | நீர்த்திட்டம் | மலகூடத்திட்டம |
|---|---|---|---|
| 01 | சங்கானை சிவப்பிரகாசா ம.வி | சுழிபுரம் ஐக்கிய சங்க வித். | அராலி வள்ளியம்மை வித். |
| 02 | அராலி கிழக்கு அ.மி.த.க.பா | பிளவத்தை அ.மி.த.க.பா | |
| 03 | சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி | | |
| 04 | மூளாய் சைவப்பிரகாசா வித். | | |
| 05 | பிரான்பற்று கலைமகள் வித். | | |

## தளபாடங்கள்

| இல | பாடசாலையின் பெயர் | தொகை |
|---|---|---|
| 01 | வட்டு இந்துக் கல்லூரி | 30 |
| 02 | சங்கானை சிவப்பிரகாசா ம.வி | 25 |
| 03 | வட்டு மத்திய கல்லூரி | 32 |
| 04 | சண்டிலிப்பாய் இந்துக் கல்லூர | 30 |

## பாலர்பாடசாலை வெளி உபகரணம் / தளபாடம்

| இல | இடம் | ஊஞ்சல் | சீசோ | அறுகோண மேசைஆறு கதிரைகள் |
|---|---|---|---|---|
| 01 | அராலி தெற்கு | 01 | 01 | 01 |
| 02 | அராலி வடக்கு | 01 | 01 | 01 |
| 03 | நாமகள் ச.ச.நி சித்தன்கேணி | 01 | 01 | - |
| 04 | காந்திஜீ ச.ச.நி மாதகல | - | - | 02 |
| 05 | ஸ்ரீமுருகன் ச.ச.நி உயரப்புலம் | - | - | 01 |
| 06 | கும்பலை ச.ச.நி அளவெட்டி | 01 | 01 | - |
| 07 | விழிசுட்டி ச.ச.நி | 01 | 01 | 01 |
| 08 | அம்பாள் ச.ச.நி கொம்பனிப்புலம் | - | 01 | 01 |
| 09 | காந்திஜீ ச.ச.நி பல்லசுட்டி | - | 01 | - |
| 10 | பண்டத்தரிப்பு | 01 | 01 | 01 |
| | மொத்தம் | 06 | 08 | 08 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புக் கட்டுரை

## மதுவும் மனிதனும்

மகிழ்ச்சியை பெற என மது அருந்துகிறாய் மனிதா
கடைசியில் பெறுவது மனமகிழ்வா? மனத்துயரா?
அந்தஸ்தை பேண விருந்துகளில் மது அருந்துகிறாய் மனிதா
கடைசியில் அந்தஸ்து உயர்கிறதா? சரிகிறதா?
உசார் கிடைக்குமென மது அருந்துகிறாய் மனிதா
கடைசியில் கிடைப்பது உசாரா? உறக்கமா?
நன்றாக கதைக்கலாமென மது அருந்துகிறாய் மனிதா
கடைசியில் வருவது சரளமான கதையா? தடுமாற்றமான கதையா?
குடிப்பின் எப் பிரச்சினையும் தீரும் என்கிறாய் மனிதா
கடைசியில் குடியே மேலான பிரச்சினையாகிறது.

எமது சமூக வரலாற்றுடன் நீண்டகாலமாக மதுப்பழக்கமானது பின்னிப்பிணைந்துள்ளது. ஆயினும் இதன் பாதிப்புப்பற்றி அன்றைய கால மக்களே அறிந்திருந்தனர் என்பது "கள்ளுண்பார் நஞ்சுண்பார்' என்ற வள்ளுவர் வாக்கிலிருந்து எமக்கு வெள்ளிடை மலையாக புலனாகிறது. ஆயினும் இன்றுவரையும் எம்மிடையே பாதிப்பை உருவாக்கும் ஒரு புரையோடிப்போன ஒரு பிரச்சினையாகவே மதுப்பழக்கம் காணப்படுகிறது. எனவே இப்பிரச்சினையிலிருந்து விடுபட மதுவைப்பற்றி, அதன் நச்சு விளைவுகள் பற்றி, அதனால் ஏற்படுகின்ற உடல், உள, சமூக, பொருளாதார பிரச்சினைகள் பற்றி விஞ்ஞான ரீதியான சரியான அறிவைப் பெற்று அதிலிருந்து சரியான முடிவை மேற்கொள்வது எம் ஒவ்வொருவரினதும் செயலாக அமைய வேண்டும்.

மது என பொதுவாக அழைக்கப்படுகின்ற போதிலும் கள், சாராயம், கசிப்பு, பியர், பிறண்டி, விஸ்கி, ஜின் என்ற பலரகங்களில் எமது நாட்டில் அது பாவனையில் உள்ளது. இவை எல்லாவற்றிலும், அடிப்படையாக அமைந்துள்ள பதார்த்தத்தின் இரசாயனப் பெயர் எதைல் அல்ககோல் ஆகும். இது பொதுவாக அல்ககோல் என அழைக்கப்படும். இவ் அல்ககோல் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் நச்சுப் பதார்த்தமாகும். ஆளுக்கு ஆள் உள் எடுக்கும் கொள்ளளவு மாறுபட்டிருப்பதாலும். ஆளுக்காள் உடலின் தன்மை மாறுபட்டிருப்பதாலும், ஆளுக்காள் மதுபானம் ஏற்படுத்தும் தீங்குகளின் தன்மை தீங்கு உருவாகும் காலம் என்பன வேறுபடுகின்றனவேயொழிய மதுபானம் தொடர்ந்து பாவிக்கும் அனைவர்க்கும் பாதிப்பை உருவாக்கியே தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் நாட்டில் ஆண்களிலேயே அதிகளவு மது துர்ப்பாவனை காணப்படுகின்றது. ஆயினும் ஆண், பெண் இருபாலரிலும் மதுப் பழக்கம் காணப்படுகின்றது. பெண்கள் மதுவிற்கு அதிக உணர்த்திறன் உடையவர்களானபடியால் பெண்களை மது அதிகம் பாதிக்கும். மது துர்ப்பாவனை இளம் சமூகத்தினரிடமும், முதியோர்களிடமும் அதிகளவில் காணப்படுகின்றது.

சகபாடிகளின் (சினேகிதர்), நெருக்குதல், சமூக கொண்டாட்டங்களில் மது எடுத்தால் இன்புற்றிருக்கலாம் என்ற எண்ணம், குடித்தால் எப்படியிருக்குமென ஏற்படும் ஒரு பரீட்சார்த்த **(Trial)** மன எண்ணம், உடல், உள நோயிற்கு மருந்தாக பாவிக்கலாம் என்ற எண்ணம் போன்றவையே மதுவை ஒருவர் முதல் **(First drink)** எடுக்க தூண்டும், சில தவறான எண்ணங்களாகும். இந்நிலையிலிந்து அனேகர் பின்வரும் சில நிலைகளினூடாக சென்று மதுவுக்கு அடிமையாகும் நிலைக்கு ஆளாகின்றனர்.

1.கட்டுப்பாடான சமூக, கலாச்சார, மது எடுத்தல். இந்நிலையில் மது எடுத்தும் விட்டும் வாழக் கூடிய நிலை.

2.சில சந்தர்ப்பங்களில் சில காரணங்களை கூறி மது பாவித்தல். உ+ம் (களைப்பை போக்க, நோயை நீக்க).

3.அனேக சந்தர்ப்பங்களில் மது பாவித்தல்.

4.ஆரம்ப மதுவினால் தங்கியிருக்கும் நிலை/அடிமையாகும் நிலை/உள் எடுக்குமளவு கூடும், மது பற்றிய சிந்தனை தீவிரமடையும்.

5.மதுவுக்கு அடிமையான நிலை தங்கியிருத்தல் நிலை.

6.மருத்துவ, உளவியல், சமூக தலையீடு ஏற்படாவிடின் இறப்பு.

## மதுவின் அடிமையாகும் நிலை/தங்கியிருத்தல் என்றால் என்ன?

பின்வரும் அறிகுறிகளில் ஒன்றிற்கோ அல்லது அதற்கு மேற்பட்ட தன்மைக்கோ ஒருவர் ஆளாகின் அவர் மதுவுக்கு அடிமையான நிலையில் உள்ளார் எனக் கருதப்படும்.

1. விடுபடல் நிலை (மதுவுக்கு அடிமையானவர் மதுவை எடுக்காமல் உள்ள நிலையில் தோன்றும்). உ-ம் நடுக்கம், பயம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுபட்ட புலனுணர்வு, நித்திரையின்மை.

2.விடுபடல் நிலையின் குணங்குறிகளை அகற்ற, மீண்டும் மதுவை உட்கொள்ளவே சிறந்த வழியென்றறிந்து, மதுவை உடனே மீளப் பாவித்தல்.

3.மதுவை உட்கொள்ள ஆரம்பித்தல், அதனை முடித்து வைத்தல், அதன் அளவை தீர்மானித்தல் என்பனவற்றை தன்னால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது என்ற சுய உணர்வு இருத்தல்.

4.உள்ளெடுக்கும் சந்தர்ப்பங்களை கட்டுப்படுத்த முடியாமை. (வாரத்தின் எல்லா நாட்களிலும் சரி, வார இறுதிநாட்களிலும் சரி, சமூக சமய காலாச்சார தடைகளின் மத்தியிலும் சரி, ஒரே தன்மையாக மது உட்கொள்ளல்).

5.வேறு மாற்றீடான இன்பங்களில் படிப்படியாக நாட்டம் குறைந்தது மது பாவனைக்கு சார்பானவற்றில் ஆர்வமாயிருத்தல்.

6.தீய விளைவுகள் வெளிப்படையாக தெரிய ஆரம்பித்த பின்பும் மதுபாவனையில் நிலைத்திருத்தல்.

7.குறிப்பிட்ட கால விடுகைக்கு பின் மீண்டும் மதுபாவயையை ஆரம்பிக்கும் போது மிக விரைவாக அதில் தங்கியிருக்கும் நிலை ஏற்படல்.

மதுபாவனையால் உடலில் ஏற்படும் பாதிப்புக்கள் இருவகைப்படும்.

1. உடனடியான, குறுகியகால தாக்கங்கள்
2. நீண்டகால தாக்கங்கள்.

**உடனடியான, குறுகியகால தக்கங்கள்:**

உட்கொள்ளப்படும் மதுவிலுள்ள எதனோலின் பெரும்பகுதி சமிபாட்டு தொகுதியின் இரப்பையிலும், சிறுகுடலிலும் விரைவாக அகத்துறிஞ்சப்படும் 90% அல்ககோல், அருந்தி 1-15 மணி நேரத்தில் குருதிச் சுற்றோட்டத்தில் கலந்து விடும். இது மூளையின் செயற்பாடுகள் அனைத்தையும் மந்தமாக்கும் தன்மை கொண்டது. அல்ககோல் குருதியில் குறைந்தளவில் காணப்படுகையிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளையின் மூளையம் ஏதும் பகுதியின் தொழிற்பாடுகளை பாதிக்கும். இது அவரின் சுய கட்டுப்பாடு நிலையில் பாதிப்பை ஏற்படுத்தும் அல்கஹோலின் அளவு குருதியில் மேலும் அதிகரிக்கையில் நடுமூளையின் தொழிற்பாடுகளை மந்தமாக்கி இதய, சுவாச தொழிற்பாடுகளில் பாதிப்பை உருவாக்கும்

## மது அருந்தியபின் ஒருவரில் தோன்றுகின்ற நடத்தை மாற்றங்கள்.

1ம் படி நிலை:- (குருதியில் 80-100 **mg%**) செயற்கையான மகிழ்ச்சிநிலை, அதிகரித்த நடவடிக்கைகள், கட்டுப்பாடு குறைந்த பேச்சுக்கள், ஐம்புலனுணர்வில் குன்றிய தன்மை.

2ம் படி நிலை:- (குருதியில் 100-300 **mg%**) நடவடிக்கைகளில் கட்புலனாகக் கூடிய மாற்றங்கள், தொழிற்பாடு மந்தநிலை, மதிப்பில்லாத செயற்பாடுகள், கண்மணி விரிவடைதல், தள்ளாட்டம்.

3ம் படி நிலை:- (குருதியில் 300 **mg%** ற்கு மேல்) தலைச்சுற்று, தள்ளாட்டம் மிகக் கூடல், கதை குறைதல், ஆழ் நித்திரையை தொடர்ந்து மயக்க நிலை, ஆழ் மயக்க நிலை, மரணம்.

இவற்றைவிட எதனோல் குருதிக்குழாய்களை விரிவடையச் செய்வதால் குருதியமுக்கம், உடல் வெப்பநிலை குறையும், உணவருந்தாமல் குடிப்பவர்கள், மற்றும் போஷாக்குநிலை குறைந்தவர்களில் குருதியில் குளுக்கோசினளவு குறையும் நிலை ஏற்படின் அதிகரித்த இதயத் துடிப்பு, படபடப்பு, வியர்வை, மயக்கம் ஏற்பட்டு மரணமும் ஏற்படலாம். அத்துடன் அதிகரித்த மதுபோதையில் விபத்து ஏற்படும் சாத்தியமும் அதிகமாகும்.

## நீண்ட கால தாக்கங்கள்:

நீண்ட கால தாக்கங்கள் எனும் போது மதுவிற்கு அடிமையான ஒருவரில் நீண்ட நாட்களின் பின் ஏற்படும் தாக்கங்களை குறிக்கின்றது. இவற்றை பின்வருமாறு வகைப்படுத்திப் பார்க்கலாம்.

1. உடல் பாதிப்புக்கள்
2. உளப் பாதிப்புக்கள்
3. குடும்ப/சமூக பாதிப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் பாதிப்புக்கள்:

உடலில் அனேகமாக அனைத்து தொகுதிகளிலும் பாதிப்புக்களை உருவாக்கும்

அல்ககோல் நேரடியாக உணவுக்கால்வாயின் மேற்பரப்பில் நேரடியாக தொடர்பு கொள்வதால் கள அழற்சி (**Oesophagitis**) இரைப்பையழற்சி (**Gastritis**) முன்சிறுகுடல் அழற்சி (**Duoedenal ulcer**) என்பவற்றை உருவாக்கும். எனவே மதுபானத்தினால் ஏற்படும் பொதுவான பிரச்சினை குடற்புண் நோயாகும். சதைய சுரப்பியிலும் அழற்சியை உருவாக்குவதால், அதன் சுரப்பான இன்சுலின் சுரத்தலிலும் பாதிப்பு ஏற்படுகின்றது. மது மிக மோசமாக தாக்குவது ஈரலையாகும். உடலில் உள்ள நஞ்சு கூறுகளையகற்றல், உணவுக் கூறுகளை சேமித்தல், புதிய புரதங்களை தொகுத்தல், பித்தத்தை சுரத்தல் போன்ற மிக அத்தியாவசியமான தொழில்களை ஈரல் புரிகின்றது. உடலின் மிக முக்கிய அங்கங்களில் ஒன்றும், வேறு பிரதியீடும் அற்றதுமான இவ் ஈரலில் ஏற்படும் மதுவின் தாக்கமே அனேகமாக மனிதனை மரணத்திற்கு நேரடியாக இட்டுச் செல்கின்றது. ஈரல் அழற்சி (**Hepatitis**) நோய், ஈரல் அழுகல் (**cirrhosis**) நோய், ஈரல் புற்று நோய் என்பன மிகவும் பயங்கரமான கொடிய நோய்களாகும். இந் நோய் நிலைகளில் இரத்த வாந்தி, வயிறு வீக்கம், இரத்தத்துடன் கூடிய கருநிற மலப்போக்கு போன்ற குணங்குறிகளும், இந்நிலை தொடரின் மரணமும் ஏற்படலாம். இதயத்தில் நீண்ட நாள் பாதிப்பாக இதயத்தின் தசைகள் வீக்கமடைந்து மயோக்காடியோபதி (**Myocardiopathy**) நிலை ஏற்பட்டு ஈற்றில் உயர் குருதியமுக்கம் (**Hypertension**) பாரிசவாதம் (**Paralysis**), மாரடைப்பு இவற்றினால் மரணமும் ஏற்படலாம். நரம்புத் தொகுதியில் தலையிடி, தலைச்சுற்று, மயக்கம், வலி, ஞாபக மறதி, கடுமையான சந்தேகிக்கும் தன்மை, கோசாக்கோல் உளமாய நோய், விடுபடல் சன்னி, கை கால் விறைப்புத் தன்மை போன்றவை ஏற்படலாம். சுவாசத் தொகுதியில் சுவாச அழற்சி, போஷாக்கு குறைவினால் கசநோய் போன்ற நோய்களும் ஏற்படும். ஆண்களில் தற்காலிகமாக பாலியல் செயற்பாட்டை தூண்டிய போதிலும் நீண்ட காலத்தில் பாலியல் செயற்பாட்டு வீரியமின்மை, மலட்டுத்தன்மை என்பனவும் ஏற்படலாம். கருவுற்ற பெண்கள் முதல் 03 மாதங்களில் மது உள்ளெடுப்பின் பிறக்கவிருக்கும் குழந்தையின் உடல், உள, ஊனங்களை உருவாக்கும். மது உள்ளெடுப்தால், உட்கொள்ளும் உணவின் அளவு குறைவாயிருத்தல், போஷாக்கான உணவை பெற நிதிப்பற்றாக்குறை, உணவு சமிபாட்டு தொகுதியின் பாதிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றால் மது பாவனையாளரின் பொதுவான உடல் போஷாக்கு நிலையில் பாதிப்பு காணப்படும். இதனால் உடல் நோயெதிர்ப்புத் தன்மை குறைவடையும். ஆகவே தொற்று நோய்களின் பாதிப்பு தீவிரமாகும்.

உளவியல் ரீதியாக பயம், விரக்தி, தாழ்வுணர்வு, குற்றமனப்பான்மை, கோபம், சந்தேகம் போன்ற பிரச்சினைகள் அதிகரிக்கும். இதனால் இவரின் குடும்ப சமூக உறவுகளில் பல பிரச்சினைகள் எழும். இறுதியில் மனச்சோர்வு, தற்கொலை நிலையும் ஏற்படலாம்.

மதுவிற்கு அடிமையானவரின் உழைப்பு ஆற்றல் குன்றுவதாலும், மதுவிற்கு ஏராளமான பணச் செலவு ஏற்படுவதாலும் குடும்ப பொருளாதார வளம் குன்றும் இதனால் குடும்ப உறுப்பினரின் போஷாக்கு நிலை குன்றல், சிறுவர்களின் வளர்ச்சி பாதிப்பு, கல்விக்கான செலவு குறைவதால் குடும்ப கல்வி தரத்தை மேம்படுத்தலில் தடை, ஏனைய குடும்ப தேவைகளை நிறைவேற்ற முடியாமை, குடும்ப சொத்துக்களை விற்றல் போன்ற குடும்ப சிக்கல்கள் ஏற்படலாம். இதனால் குடும்ப சுமையை தாங்க மனைவி அல்லது சிறுவர்கள் உழைக்கும் பொறுப்பு ஏற்கும் நிலை நேரிடலாம். தொழிலைப் பொறுத்தவரையில் அவரின் தொழில் புரியும் ஆற்றல் குறைதல், தொழிலிடத்தில் சச்சரவு, முறையற்ற லீவுகள் போன்றவற்றால் தொழிலையும் இழக்க நேரிடலாம். இவற்றினால் குடும்பங்களில் சர்ச்சைகள், சண்டைகள், சித்திரவதை, போன்ற வீட்டு செயல்கள் மற்றும் மனமுறிவுகளும் ஏற்படுகின்றன. அத்துடன் களவு, கொலை போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடல், விபத்துக்களிற்கு ஆளாகுதல், சமூகத்தில் ஏனையோருடன் சண்டைகளில் ஈடுபடல் போன்ற சமூகப் பிரச்சினைகளிலும் ஈடுபடலாம்.

## சிகிச்சை முறைகள்

1.உடலின் குறித்த ஒரு பகுதியில் நோய் எனின் துறைசார் மருத்துவ நிபுணரின் சிகிச்சை முறைகள்.

2.மதுவுக்கு அடிமையான நிலையிலிருந்து விடுபட வேண்டும் என்ற மனநிலையிலுள்ளோர், விடுபடல் அல்லது ஏதாவது உளப்பாதிப்புக்கு உள்ளானவர்கள் உள வைத்திய நிபுணரின் ஆலோசனையைப் பெறவேண்டும். (எமது பிரதேசத்தில் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உள்ளக கிளினிக் சிகிச்சையும், யாழ் போதனா வைத்தியசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளினிக் சிகிச்சையும், உள மருத்துவ நிபுணரினால் வழங்கப்படுகிறது). பன்முகப்படுத்தப்பட்ட இச் சிகிச்சையினை உளமருத்துவ நிபுணர் மேற்கொள்வார். நஞ்சகற்றும் பொறிமுறை சிகிச்சை, வேண்டின் வெறுப்பூட்டும் சிகிச்சை, உளவளத்துணை, சாந்தப்படுத்தல் சிகிச்சைமுறை, முழுசிகிச்சைமுறை போன்ற பன்முகப்படுத்தப்பட்ட சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்படலாம். விடுபட்டவர்களிற்கு சுய உதவிக்குழுவினர் **(Alcoholic Ananymous)** பேருதவியாக அமைகின்றனர். இக்குழுவினர் மதுவைக் கைவிட உறுதிபூண்டவர்க்கு ஊக்குவிப்பாக இருந்து மதுவிலிருந்து முற்றாக நீக்க உதவுவர். முது அடிமை நிலையிலிருந்து மீண்டவர்கள் தாம் அமைத்துக்கொண்ட புதிய வாழ்வை தக்க வைத்துக் கொள்ளவும், ஒருவர்க்கொருவர் உதவி செய்யவும், ஒருவர் தவறி மீளவும் நழுவிக் குடிப்பழக்கத்தில் விழும் நிலையேற்படின் அவருக்கு உதவும்படியாகவும் செயற்படுகின்றனர். (மா.வை.. தொல்லிப்பழை, போதனா வைத்தியசாலை-யாழ்ப்பாணம், சாந்திகம் ஆகிய இடங்களில் இச்சேவை உண்டு.

**மதுவை விலக்க:**

1.இதுவரை ,பாவிக்காதவர்கள் தாங்கள் எந்த தருணத்திலும் மதுவை எடுக்கப் போவதேயில்லை என்று உறுதியான தீர்மானம் எடுக்க வேண்டும்.

2.துர்ப்பாவனையில் ஈடுபடுபவர்கள் நிறுத்த வேண்டும் என்ற எண்ணம் எழும் வேளைகளில் (ஏதாவது உடல் நோய், விபத்துக்களின்பின்) இனிமேல் எடுப்பதேயில்லை என்று உறுதியான தீர்மானம் எடுக்க வேண்டும்.

3.நிறுத்த முடியாத எண்ணமுடைய துர்ப்பாவனையில் ஈடுபடுபவர்கள் வீரியம் குறைந்த மது வகைகளை, எடுக்குமளவை குறைத்தல் ஆகிய தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.

**மதுபானம் எடுக்காமலிருக்க வேண்டும் என்ற சிந்தனையை தூண்டக்கூடிய சில ஆலோசனைகள்.**

1.எமக்கு விருப்பமில்லாத அல்லது தீங்கான எந்த வேண்டுகோளும் எமது நண்பர், உறவினரிடமிருந்து எழுந்தாலும் "வேண்டாம், இல்லை" என திட்டவட்டமாக மறுத்து பதிலளிக்கும் மனப்பாங்கை வளர்த்தல். இப் பயிற்சி விருந்துபசாரம் அல்லது வேறு எந்த சந்தர்ப்பங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மது அருந்த கேட்கும் நண்பர்களிற்கு வேண்டாமென திட்டவட்டமாக மறுத்து பதிலளிக்கும் பழக்கத்தை தரும்.

2.மருத்துவ ரீதியான சரியான விஞ்ஞான விளக்கங்களின் மூலம் மது உடலில் ஏற்படுத்தும் தீங்குகள் பற்றிய யதார்த்தமான அறிவை பெற்று மதவை ஏற்கமறுக்கும் மனப்பாங்கை வளர்த்தல். (மதுப்பழக்கத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்ட ஒருவரை நினைவு கூரல்) மேற்கூறப்பட்ட செயற்பாட்டில் உதவி புரியலாம்.

3.பொருளாதார ரீதியான தீங்கைப் பற்றி தர்க்கரீதியான விளக்கத்தை பெற்று, மதுவின் தீங்கைப் புரிந்து மதுவை ஏற்க மறுக்கும் மனப்பாங்கைப் பெறல். (உ-ம்! கூலிவேலை செய்யும் ஒரு தொழிலாளி ரூபா 10.00 வீதம் ஒரு நாளிற்கு 2 போத்தல் கள்ளும், 5.00 ரூபா வீதம் ஒரு நாளிற்கு வெற்றிலை, பாக்கு, சுருட்டு பாவிப்பின் அவன் குடித்த 20 வருடங்களின் மொத்த செலவை பாருங்கள்......... 20.00 + 5.00 = ஒரு நாளிற்கு 25.00 ஒரு மாதத்திற்கு = 25.00 x 30 நாட்கள் = 750.00, ஒரு வருடத்திற்கு = 750.00 x 12 மாதங்கள் = 9,000.00, ஆகவே இருபது வருடங்களில் =9,000.00 x 20 வருடங்கள் 180,000.00 = ஒரு லட்சத்து எண்பதாயிரம் ரூபா.

4.சிறந்த பொழுது போக்குகளில் ஈடுபடல். (விளையாட்டு, சமூக வேலைகள், சமயத் தொண்டுகள் போன்ற).

5.தொலைக்காட்சி, பத்திரிகை போன்ற செய்தி ஊடகங்களில் மதுசார் விளம்பரங்கள், வியாபார யுக்தியானவை என்பது மட்டும்தான் உண்மை, அத்துடன் பின்னிப்பிணைந்துள்ள காட்சிகள், மனிதர்கள் மதுவுடன் யதார்த்தமாக தொடர்பற்றவை என அறிவார்ந்த ரீதியில் சிந்தித்து தெளிவுபெற வேண்டும்.

6.சமூக ஆதரவு வழங்கல், மது பாவிப்பவரை சமூக செயற்பாடுகளில் பங்குகொள்ள இடமளித்து தான் பெறுமதியானவர் என உணரச் செய்தல், மதுபான வியாபார ஊடுருவலை தடுக்க சமூக மட்டத்தில் திட்டமிடல், இளைஞர்க்கு விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ளல், மதுபான தொழிலில் ஈடுபடுவோர்க்கு மாற்று பொருளாதார ஏற்பாடுகளிற்கு திட்டமிடல் போன்ற நடவடிக்கைகள் சமூக பண்பாட்டையும் மேம்படுத்த உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மது பற்றிய சில தவறான கருத்துக்கள்:

1.மது உடலுக்கு சக்தி அளிக்கின்றது.

இல்லை:! மது அருந்துவது அதிக கலோரிகளை உடலிற்கு தந்தாலும், அதில் உடலிற்கு அத்தியாவசியமான சத்துப் பொருள் எதுவுமில்லை. அத்துடன் மது அருந்தினால் ஏனைய உணவு உள்ளெடுக்குமளவையும் இது பாதிக்கும். அது மட்டுமின்றி உடலுக்கு மிக அத்தியாவசியமான புரதச்சத்து இரத்தத்தில் குறைவதற்கு மது காரணமாகின்றது. முக்கிய உயிர்ச்சத்துக்களான **A, B1, B3, B6, C** என்பனவும் மதுபாவனையால் உடலில் குறைகின்றன. எனவே மது உடலுக்கு சத்து எதனையும் அளிக்காமல், மாறாக உடலில் உள்ள சத்துக்களையும் குறைக்கின்றது.

2.மது மனதிற்கு மகிழ்ச்சியை வழங்குகின்றது:

இல்லை:! மதுவானது மூளைக்கலங்களின் செயற்பாட்டில் ஒரு தற்காலிக மந்த நிலையை உருவாக்குவதால், எமது பிரச்சினைகளிலிருந்து விடுபட்டதான ஒரு பாதார்த்தமற்ற ஒரு தற்காலிக சந்தோச நிலையை வழங்குகின்றது. உண்மையான பிரச்சினைக்கு தீர்வு காணமல், தற்காலிக இந்நிலையே மகிழ்வான நிலை எனத் தவறாகக் கருதப்படுகிறது.

3.சில தொழில்களுக்கு மது அருந்துவது அவசியம்:

இல்லை:! எந்தத் தொழில் புரிபவராயினும் தொழில் புரிகையில் மது உள்ளெடுப்பதாலோஅவரின் உடல், உள்ளத்தில் ஈற்றில் சிக்கலே ஏற்படும். இது அவரின் தொழில் ஆற்றும் திறனில் பாதிப்பையே உருவாக்கும், மாறாக தொழில் ஆற்றும் திறன்களை விருத்தி செய்வதாலும், போதிய ஓய்வெடுப்பதாலும் மட்டுமே தொடர்ந்து பல காலம் சிறப்பாக தொழில் புரியலாம்.

4.விருந்துபசாரங்களில் மகிழ்வை ஏற்படுத்த மது அவசியம்:

இல்லை:! மது உள்ளெடுக்கும் அளவை கட்டுப்படுத்த முடியாமல் உள்ளெடுக்கும் அளவைக் கூட்டுகையில் அவர்கள் அவ்விருந்துபசாரங்களில் குரல் தடுமாறி கதைக்க கஷ்டப்படல், தள்ளாடுதல், விழுதல் போன்ற செயற்பாடுகளினால் முழுமையான மகிழ்ச்சியை அடைய முடியாதவராகிறார்கள். ஏனையோரின் ஏளனத்திற்கும் ஆளாவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.மதுவினால் உடலுறவு இன்பம் அதிகரிக்கிறது:

இல்லை:! தற்காலிகமாக இன்பத்தை அதிகரிப்பதாக உணர்ந்தாலும், இந்நிலை தொடர்கையில் அவரை தாம்பத்திய உறவு கொள்ள சக்தியற்றவராகி விடுகிறது.

6.மது அருந்திய பின் எக்காரியங்களையும் செய்து முடிக்கலாம்:

இல்லை:! மது உட்கொண்டபின் ஒரு விடயம் பற்றி சிந்தித்து, தீர்மானம் எடுக்கின்ற தன்மையில் நிறைய பாதிப்பு ஏற்படும். அத்துடன் மதுவுக்கு ஆளான பின் உடல் இயக்க செயற்பாட்டிலும் பாதிப்பு ஏற்படும். ஆகவே மது எடுத்தபின் செய்யப்படுகின்ற எச் செயற்பாடுகளும், மது எடுக்காமல் செய்கின்ற செயற்பாட்டை விட குறைந்தளவு நற்பலனையே வழங்கும்.

தயாரித்தவர்:

திரு. சோ. இராசேந்திரன்,

உளவளத் துணையாளர், சாந்திகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கசிப்பு"..........இதை ஒழிக்க வழி?

மூன்று தசாப்பதங்களுக்கு முன்பு, நான் சிறுவனாக சிறகடித்துத் திரிந்தகாலம் அது. காச்சுச் சாராயமாம் குடித்தால் ஈரல் அறுமாம்! பொலிஸ் கண்டால் பிடிக்குமாம்! பிடிச்சால் கடும் குற்றமாம்! தண்ணிமாதிரி இருக்குமாம்! சரியான வெறி வெறிக்குமாம்! இவ்வாறு கிராமத்தில் பேசப்பட்டு வந்த இந்த சட்டவிரோத மதுபானத்தை பார்த்துவிட வேண்டுமென்ற ஆவல் எனக்கிருந்தது. ஆனால் அந்த ஆவல் அப்பொழுது நிறைவேறவில்லை.

உரும்பிராயில் வாழைத்தோட்டத்திற்கு மத்தியில் நில அறைகளில் ரகசியமாக வடிக்கிறவர்களாம். குடிக்க வேண்டுமென்றால் உரும்பிராய் பக்கம் போக வேண்டுமாம். அதுவும் நல்லாகத் தெரிந்த ஆட்களுக்குத்தான் கொடுப்பார்களாம். இப்படியெல்லாம் ஊரில் பேசிக்கொள்வார்கள்.

ஆனால் இப்போது நிலமை என்ன?

முற்றிலும் மாறியுள்ளது. தலை கீழாக மாறிவிட்டது. கிராமத்திற்கு கிராமம் போட்டிபோட்டு உற்பத்தி செய்கின்ற குடிசைக் கைத்தொழில் போன்று கசிப்பு உற்பத்தி மாறிவிட்டது. இது ஆச்சரியத்திற்கும் விசனத்திற்குமுரிய செயலாகும். இதேவேளை அனேக இல்லங்கள் கசிப்பு விற்பனை நிலையங்களாகவும் மதுபான பார் (**Bar**) களாகவும், சில வீடுகள் கிளப் (**Club**) களாகவும் மாறி விட்டன. இம்மாற்றத்திற்குரிய காரணங்களை ஆராய்வோமாகில் அதில் ஒன்று கசிப்பு அருந்தும் பழக்கமுடையவர்கள் சமூகத்தின் அனேக மட்டங்களிலும் உருவாகிவிட்டமையே ஆகும். இவர்களில் பெரும்பான்மையானோர் பாமர ஏழ்மை நிலையில் உள்ள மக்களேயாவர்.

## முக்கோண அமைப்பு:

இந்தக் கசிப்பு எனப்படுவது உற்பத்தியாளர், விற்பனையாளர், பாவனையாளர் ஆகிய மூன்று தரப்பினர்கள் சம்மந்தப்பட்ட விடயமாகும். இம்மூன்று தரப்பினரும் சங்கிலித் தொடர்புடைய முக்கோண அமைப்பைக் கொண்டுள்ளனர். மேறபடி மூன்று தரப்பினரில் எவரைத்தடை செய்தால் அல்லது எவரில் மனமாற்றத்தை ஏற்படுத்தினால் இந்த அமைப்பு சிதைவடையும்-------? இந்தக் கேள்வியே நம் சிந்தனையை மட்டுமல்ல இதை விசுவாசமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பவர்களது சிந்தனையையும் அடிக்கடி அலைத்துக் கொண்டிருக்கிறது. இன்னாரைத்தான் தடுப்பது என்று எடுத்த எடுப்பிலே தீர்மானித்துவிட முடியாதுள்ளது. ஆனால் மேற்சொன்ன மூன்று பகுதியினரும் சமூகச் சீர்கேடுகளுக்கும் களவு, கொலை போன்றவற்றிற்கும் காரணமாக உள்ளனர்.

அனேக கிராமங்களில் வீறு கொண்டெழுந்த இளைஞர் குழுக்கள், சமூக நலன் விரும்பிகள் கசிப்புக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். இந்நடவடிக்கைகள் கசிப்புடன் தொடர்புள்ள அந்த மூன்று தரப்பினருக்கும் எதிராக எடுக்கப்பட்டன. கசிப்பு உற்பத்தி செய்யும் கொதிகலன்கள் (தகரப்பீப்பாக்கள்), செப்புக்குழாய்கள், பிளாஸ்ரிக் பரல்கள் கோடரிகளால் கொத்தி எறியப்பட்டன. விற்பனை செய்யும் வீட்டுக்குள் புகுந்து கசிப்பு பரல்களை கைப்பற்றி விற்பவரின் தலையில் கசிப்பை ஊற்றி பரல்களையம் வெட்டி எறிந்தனர். கசிப்பு குடிப்பவர்கள் நையப்புடைக்கப்பட்டார்கள். நடந்தது என்ன-----------? பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதைதான்.

புதிய கொதிகலன்கள், செமப்புக்கம்பிகள், பரல்கள் யாவும் எவ்விதப்பட்டும் வாங்கப்படும். முன்பை விட ரகசியமான முறையில் கசிப்புக் காய்ச்சப்படும். (வடிக்கப்படும்) பகிரங்கமாக விற்பனை செய்தவர்கள் ஒழித்து பதுங்கி விற்பார்கள். முன்பு ஆரச்சோர இருந்து கதைகள் பல பேசி குடித்து மகிழ்ந்தவர்கள் இப்போ அங்கு மிங்கும் பார்த்துவிட்டு நின்ற நிலையில் குடித்துவிட்டு ஓடிவிடுவார்கள். தம்மைத்தாமே ஏமாற்றும் இந்த ரகசிய நாடகங்களை தொடர்ந்து மேடை ஏற்ற முடியாமல் இந்த மூவேந்தர்களும் களைத்து விடுவார்கள். இவை யாவும் நாம் கணகூடாகக் கண்டு கொண்டிருக்கும் யதார்த்த நிலையாகும். இதில் வேடிக்கை என்னவென்றால் வீறு கொண்டெழுந்த அந்த கசிப்பு பிடிக்கும் குழுக்களும் களைத்துப்போய் மூலையில் சுருண்டு விடுவார்கள். கேட்டால் "உதுகளைத் திருத்த முடியாது" எனக் கூறி அலுத்து விடுகிறார்கள். இதுபோன்ற சீர்திருத்த நடவடிக்கைகள் ஏன் தோல்வியில் முடிகின்றன? சிந்திக்க வேண்டியுள்ளது. ஒருதடவை அல்லது பலதடவை சிந்திக்க வேண்டிய நேரம் இது. இவ்வாறான நடவடிக்கைகள் தோல்வியில் முடிவடைந்தமையால் கசிப்பை இனிமேல் நிறுத்தவே முடியாது என்ற முடிவுக்கு வரலாமா? அப்படி ஒரு முடிவை மனத்திருப்தியுடன் ஏற்றுக் கொள்ள முடியாது. வேப்பங்காயை உண்பதுபோல் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் தான் ஒழிக்க வேண்டும்

கசிப்புடன் தொடர்புள்ளவர்கள் சமூகத்தில் 5 முதல் 10 சதவீதமானவர்கள் இருப்பார்கள் எனவும் எது நடந்தாலும் நடக்கட்டுமென கண்களை மூடிக்கொண்டிருப்பவர்களை 30 சதவீதம் எனவும் மிகுதி 60 முதல் 65 சதவீதமானவர்கள் கசிப்பை முற்றாக ஒழிக்க வேண்டுமென விரும்புவர்களாகவும் உள்ளனர். இப்புள்ளி விபரம் எமது கிராமத்தை பொறுத்த வரையில் ஏறத்தாழ சரியாக உள்ளது. ஆகவே பெரும்பான்மையானவர்கள் கசிப்பை எதிர்ப்பவர்களே ஆவார்கள். ஏனவே இந்தப் பெரும்பான்மையான மக்கள் கூட்டத்தால் இதை ஒழிக்க முடியாவிட்டால் வேறுயாரால் ஒழித்துவிட முடியும்? சட்டத்தால் முடியுமா? மதக்கோட்பாடுகளால் முடியுமா? சமயக் குருமார்களால் முடியுமா? சுவாமிகளால் முடியுமா? கல்விமான்களால் முடியுமா? பணபலம் படைத்தவர்களால் முடியுமா? அரசியல் வாதிகளால் முடியுமா? மருத்துவ நிபுணர்களால் முடியுமா? நினைத்த காரியம் கெடுதி பெல்லி சூனியம் செய்பவர்களால் முடியுமா? கிராமச் சண்டியர்களால் முடியுமா? அந்த வேளையில் இருந்த நிர்வாகம் இவ்விடயத்தில் அதிக கவனம் எடுத்ததன் விளைவாகவே மாற்றம் ஏற்பட்டது. ஆனாலும் அந்த நிலை தொடர்ந்து நீடிக்கவில்லை. 1996 ஆம் ஆண்டின் பின் படுமோசமான நிலைக்கு வந்துவிட்டது. எனவே அந்த 5 ஆண்டு காலப்பகுதியில் நடந்தது என்ன? கசிப்பு நடவடிக்கைச் சிந்தனைகள் நீறு பூர்த்த நெருப்பாகவே இருந்தன என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய உண்மையாகும்.

கசிப்பை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற உறுதியான முடிவுக்கு நாம் வருவோமாகில் அந் நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்று நாம் அனைவரும் கூடி ஆராய வேண்டியுள்ளது. இவ்வாறு ஆராய்வதற்கு என்னென்ன விடயங்களை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்? அவ்வாறான அடிப்படைகள் வேறு சமூகப்பிரச்சினைகளை தோற்றுவிக்குமா? இவ்வாறான முயற்சிகள் எந்த இடத்திலிருந்து எந்தச் சந்தர்ப்பத்தில் எப்போது எவர்களால் ஆரம்பிக்கப்பட வேண்டும்? என்றெல்லாம் நன்கு சிந்திக்க வேண்டும். இப்[illegible] சமூகத்தில் சகல மட்டங்களிலும் இருந்தும் வீரர்கள் வீராங்கனைகள் உத்வேகமாகவும் நிதானமாகவும் அர்ப்பணிப்பு உணர்வோடும் புறப்பட வேண்டும்.

மற்றவர் அழிந்தால் எனக்கென்ன, நானும் எனது குடும்பமும் வசதி வாய்ப்புகளுடன் வாழ்ந்தால் போதும் என்று சிந்திப்பவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறான கொள்கைகளை தீயிலிட்டு கொழுத்தி விட வேண்டும். எல்லாம் தலைவிதி, தலைஎழுத்து என்று சமாதானம் சொல்பவர்கள் இந்த கசிப்பு விடயத்திலாவது அந்தக் கோட்பாடுகளை காற்றில் பறக்கவிட வேண்டும்.

பலவிதமான குணாம்சங்கள், பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் ஒன்று சேர்ந்ததுதான் மனித வாழ்க்கை அதில் கசிப்பு உற்பத்தி, விற்பனை, பாவனை எல்லாம் உள்ளடக்கப்பட்டதுதான் என்று கூறிவிட்டு நழுவிச் செல்லும் தன்மையுள்ள சமூக நீதிமான்கள் கசிப்புவிடயத்திலாவது தங்கள் சித்தாந்தங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இவ்வாறு மனந்திரும்பி சிந்திக்க வேண்டியவர்கள் அனைவரும் ஒன்ற கூடி சிந்தித்தால் கசிப்பு ஒழிப்பு சாத்தியமாகலாம்.

இ. சிவநாயகம்
தலைவர், சக்திக்குழு

வாசகர் சிந்தனைக்கு

**படகுத்துவாரமும் பயணிகளும்**

அகன்ற சமுத்திரத்தில் சென்றுகொண்டிருந்த கப்பல் ஒன்று உடைந்து தாழ்ந்து கொண்டிருந்தது. அதில் பயணம் செய்தவர்கள் உயிர்காக்கும் படகில் சென்றுகொண்டிருக்கும் போது அப்படகில் துவாரம் ஒன்று ஏற்பட்டது.

படகுத்துவாரத்தை அடைப்பதற்கு சில பயணிகள் முயற்சிகள் எடுத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது படகின் மறுபக்கத்தில் அமர்ந்திருந்த ஒருவர் மற்றவருக்குக் கூறினார்: நல்லவேளை அந்தததுவாரம் எங்களுடைய பக்கத்தில் இல்லை!

இவர்கள் சமுதாயத்தில் பிரச்சினைகள் ஏற்படும்போது அவற்றை தீர்க்க முன்வராது சும்மா இருந்து அதைப்பற்றி வீணே அலட்டுவோரை ஒத்தவராவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமனாக வாழுதல்

உலகில் வாழும் உயிரினங்கள் பற்பல. இவை அனைத்திலும் உயர்வான பிறப்பாக உயர்திணையாகக் கொள்ளப்படும் பெருமைக்குரிய பிறவி மனிதப்பிறவி. "அரிது அரித மானிடராய் பிறத்தல் அரிது" என்று ஔவையும் மானிடப்பிறவியின் மாண்பினை எடுத்துக் கூறியுள்ளார். இத்தகைய மானிடப்பிறவியில் ஏனைய உயிர்களில் பாராட்டப்படாத ஆண், பெண், உயர்வு, தாழ்வு என்ற பேதம். பகுத்தறிவுள்ள சமுதாயத்தில் பாராட்டப்படுவது விந்தையானதும் வேடிக்கையானதுமாகும். பெண்ணுக்கு முதன்மை தந்து சக்தியாகவும் தாயாகவும் போற்றுகின்றது தமிழ் சமூகம். ஆனால் அதே பெண் இனத்தை பண்டு நாள் முதல் இற்றை நாள்வரையும் அடிமைகளாகவும், சமத்துவம் அற்றவர்களாகவும் நடத்தி வருகின்றது. இந்நிலை கண்டு உள்ளம் கொதித்து,

"மாதர் தம்மை இழிவு செய்யும்
(வைய வாழ்வுதனில்) மடமையைக் கொளுத்துவோம்
எந்த வகையினும் நமக்குள்ளே
தாதர் என்ற நிலமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநகர் சமனாக
வாழ்வோம் இந்நநாட்டிலே"

என்று அறை கூவல் விடுத்தான் 20ஆம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற தமிழ்க் கவிஞன் பாரதி. இவ்வுலகில் அன்று தொட்டு இன்றுவரை நிலவி வரும் அடக்கு முறைகளில் பெண்ணடிமையும் ஒன்று. இதிலிருந்து விடுபட உலகின் பல நாடுகளிலும் பெண்கள் போர்க்கொடி ஏந்திப் போராடி தமது சமத்துவ உரிமைகளை பெற்றமை வரலாற்று முக்கிய நிகழ்ச்சிகளாக அமைகின்றது. இன்று ஐக்கிய நாடுகளின் அமையமும் ஆண்களும், பெண்களும் சமத்துவமானவர்கள் எனத் தனது பிரகடனத்தில் தெரிவித்துள்ளபோதும் ஆங்காங்கே பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகள் நீறுபூத்த நெருப்பாக கனன்று கொண்டிருப்பதைக் காணலாம். பொருளாதார விஞ்ஞானத் துறைகளில் மிக்க வளர்ச்சி கண்ட சில நாடுகளில் ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமனாக வாழும் நிலை காணப்படினும் அங்கும் வெளிச்சத்துக்கு வராத அடக்குமுறைகள் இருக்கவே செய்கின்றன என்பதைப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாயிலாக அறிய முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணிற்கு குடும்பத்திலும், சமூகத்திலும் பாரிய பொறுப்பும், பங்களிப்பும் உண்டு இதனை உணர்த்துவது போல் இந்து சமய தத்துவமே "அர்த்த நாரீஸ்வரராக" இறைவனைக் காண்கிறது. உலகம் ஆண்பாதி பெண்பாதி என்று எடுத்தியம்புகின்றது. எழுத்திலும், பேச்சிலும், வார்த்தைக்கும், வார்த்தை சமத்துவம் பேணப்படுகின்ற போதிலும் நடைமுறைகளில் ஆண்களோடு பெண்கள் சரிநிகர் என்பது இன்றும் கேள்விக்குறியாக நிற்கின்றது. இதற்கு காரணம் பெண்களின் இயற்கை உடல் இயல் ஊற்று வேறுபாடா? மெல்லியலாளரின் மெல்லிய உள்ளமா? அல்லது பொறுமை என்னும் அணிகலனா? அல்லது ஆண் ஆதிக்க சமுதாயத்தின் ஆணவமும் அலட்சியமா? எதுவாக இருப்பினும் சமத்துவம் இன்மை ஏற்புடைய கருத்து அன்று. ஆகவே ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமனாக வாழ்தலே ஏற்புடைய தத்துவம்.

இன்று ஜனநாயக அரசியல் எழுச்சியும், அனைவர்க்கும் கல்வி என்னும் விழிப்புணர்வும், பெண்களின் சமூகநிலையினை ஓரளவு உயர்த்தி உள்ளன. அரசியல், மருத்துவம், பொறியியல், சட்டம், பாதுகாப்புத்துறை, விண்வெளி ஆய்வு போன்ற சகல துறைகளிலும் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமனாக வாழும் நிலையினை ஏற்படுத்தி உள்ளன.

இன்றைய பொருளாதார நிலையில் சகலரும் உழைத்து வாழவேண்டிய நிலையில் ஆண்களுடன் பெண்களும் சகல துறைகளிலும் சமத்துவமாக தொழில் புரிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இல்லத் தலைவியாகவும், ஆண்களின் உள்ளத் தலைவியாகவும் இருந்த பெண்கள் இன்று மேன்மேலும் உரிமைகள் பெற்று சகல துறைகளிலும் ஆண்களுடன் சரிநிகர் சமனாக வாழும் நிலைமையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

வாழ்க பெண்மை! வளர்க சமத்துவம் !

திருமதி பா.தங்கராணி,
அளவெட்டி மேற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைப்பூங்கா

### வெறுப்புக்குரிய கசிப்பு

தொண்டையிலே ஓர் எரிப்பு
தொடர்கையிலே ஓர் விருப்பு
தொல்லைகள் யாவும் ஓர் நினைப்பு
கொடுப்பதுதான் இந்தக் கசிப்பு

வடியின் மறு பெயர் கசிப்பு
வாழ்வினில் வசந்தமோ எரிப்பு
வளம் தரும் பொருட்களோ துருப்பு
கொடுப்பது தான் இந்தக் கசிப்பு

காலையில் எழுந்ததும் களைப்பு
கசிப்பினை அடித்ததும் துடிப்பு
மாலை முழுதும் ஒரு பிடிப்பு
கொடுப்பது தான் இந்தக் கசிப்பு

கும்பிடும் தெய்வமும் வெறுப்பு
குறுக்கிடும் யாவுமே உடைப்பு
குடும்பத்தின் மீதும் ஓர் முறைப்பு
கொடுப்பது தான் இந்தக் கசிப்பு

யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன்
சி. மயூரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒன்று கூடி உலக வாழ்வில்
உயர்வு செய்ய வேண்டும்.**

மனிதன் என்ற பெயரைக் காக்கும்
மாண்பு உள்ளம் வேண்டும் - புது
வனிதம் சேர்க்கும் அன்பு நீதி
வாழ்வுதோறும் வேண்டும்

கல்வி என்னும் ஒளியின் வெள்ளம்
கலந்த இதயம் வேண்டும - உயர்
செல்வம் அதனின் சிறப்பினாலே
சிறுமை அகல வேண்டும்

தத்துவங்கள் சொல்லி வைத்த
தர்மவான்கள் வாழ்வு - நம்
புத்தி தன்னை பட்டை தீட்டி
புதுமை புரிய வேண்டும்

பிஞ்சு மனங்கள் நன்மை தீமை
பிரித்து அறிவதில்லை - அவர்
நெஞ்சு மீதில் வாழ்க்கை நீதி
நித்தம் உரைக்க வேண்டும்

இன்று செய்யும் தவறை எண்ணி
இதயம் நாளை நோகும் - நாம்
ஒன்று கூடி உலக வாழ்வில்
உயர்வு செய்ய வேண்டும்.

கருணாகரன் டிசாந்
விழிசுட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வை ஒழித்த மது

அன்னை தந்தையர்க்கு அன்பான நானொருவன்
அருந்தவப் புதல்வனன்றோ அருமையாய் வளர்த்தென்னை
பள்ளியிலே படிக்க வைத்து பாடங்கள் பல புகட்டி
வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி வகுத்துத் தந்தார் தந்தை

சீருடனே வாழ் என்று சீதனத்துடன் பெண்ணொருத்தியை
ஊரார் அறிந்திடவே சேர்த்து விட்டார் என்வாழ்வில்
சிறகடித்துப் பறந்ததம்மா எம் குடும்பம் சிறகொடிந்து வீழ்ந்திடவே
வந்ததோர் நாகம் மதுவென்ற நஞ்சுடனே.

குடியென்ற போதையிலே குதித்தேனே நானொருவன்
மதுவென்ற போதையினை மதித்தேனே நானொருவன்
ஆராரோ ஆக்கி வைத்த் மதுவென்ற நஞ்சுதனை
அரு மனையாள் தாலி விற்று அருந்தினேன் அமிர்தமென்று

குடல் சுருகி வேகுதையோ குனிந்து நான் நடக்கையிலே
குடும்பமோ அழுகுதையா கொடும்பசியால் வாடுதையோ
ஊரார் சிரித்திடவே என் குடும்பம் வீதியிலே
இக் கெதி நான் வருமென்றே எள்ளளவும் நினைத்ததில்லை.

அருமனையாள் சொற்கேளா தருந்தினேன் மது தன்னை
தவப்புதல்வன் சொற்களோ வீதியிலே நிற்கின்றேன்
அன்னை தந்தை சொற்கேளா தலைகின்றேன் நானொருவன்
அன்னை தம்பி சொற்கேளா தடிமையானேன் மதுவிற்கு

சோர்க்கமென்று நினைத்து மதுவினை நான் தொட்டேனே
நரகமாய் போனதடா வாழ்நாளே இன்று
பெற்றவர் கடமை முடியுமுன்னே என் வாழ்வு முடிந்ததடா
விண்ணுலகம் செல்கின்றேன் விரும்பியுண்ட மதுவினால்

இ. ரசிக்குமார்
பல்லசுட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கள்ளுண்ணக் கூடாது தம்பி!

காலை எழுந்தவுடன குடிப்பு பின்பு
கைகால் நடுக்கம் ஈரல் வலிப்பு
மூளை முழுதும் முழுக் குழப்பம் - என்றும்
வழக்கப் படுத்தும் மதுப்பழக்கம்

வெள்ளை உணவுகளில் வெறுப்பு நன்கு
வேண்டும் சாராயக் கறுப்பு
மாலை வேளை கண்ணில் குழப்பம்
என்றும் வழக்கப்படுத்தும் மதுப்பழக்கம்

வண்டி ஊதும் பெரும் பலூன் போல்
கடும் வாந்தி எடுக்கும் வாட்டர்பம் போல்
தொண்டை கேரும் அடைக் கோழி போல்
என்றும் வழக்கப்படுத்தும் மதுப்பழக்கம்

தட்டுத் தடுமாறும் சொல்லு கால்
தடக்கிடத் தைக்கும் அங்கு முள்ளு
வட்டி பல வளர்க்கும் கள்ளு
என்றும் வழக்கப்படுத்தும் மதுப்பழக்கம்

கள்ளுண்ணக் கூடாது தம்பி கொடும்
கசிப்புண்ணல் ஆகாது தம்பி
மதுவை மறந்து விடு தம்பி
நல்வாழ்வு மலரும் என்று நம்பி

அம்சுமாலினி. சிவநீதன்
அறிவொளி முன்பள்ளி ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கை அன்னையின் ஏக்கம்

உயிர்களில் உயர்வு கொண்ட உன்னத மனிதா நீயும் ஹ
அயர்வினைப் போக்கி நித்தம் அன்பினால் உலகை ஆள்வாய்
துயருறும் அவனி தன்னில் துணைபோக முடியாதேனும்
பயனுறச் செயல்களாகவே சூழற்சமநிலை கெடுத்திடாதே

சூழலில் மாசுசேர்க்கும் செயல்களோ ஓர் ஏராளம்
வாசலிற் சாக்கடை நீர் வழியெல்லாம் குப்பை கூழம்
சாலையில் வாகனங்கள் கக்கிடும் புகை தாராளம்
அலைகள் அனலைத் தள்ள வெங்கும் மக்கள் ஏராளம்.
கூவியே வந்த செல்லால் கிராமமே அழிந்து போச்சு
குத்திய கிபிரின் குண்டாற் குடும்பமே சிதைந்து போச்சு
சிந்திய குருதிச் சேற்றில் பிணங்களும் புழுவாயாச்சு
எந்தையே இதுவும் உந்தன் திருவிளையாடலாச்சா?

பாரதப் போரில் அன்று வீரரே மடிந்தார் மண்ணில்
பாதகமறியா மாந்தர் மரம்செடி அழியவில்லை
அறத்தினைக் காத்தபோராற் கீதை நூல் நமது கையில்
முறத்தினில் வந்த சூதால் இயற்கையே எமனடியில்

இயற்கை அன்னையே ஏங்கித் தவிக்கின்றாள்
ஓசோன் படலமோ ஒப்பாரி வைக்கின்றாள்
குண்மூடிச் செயலின் தீமை மண்மூடிப் போகவேண்டும்
மரங்களை நட்டுவை மனிதா மாசினை அகற்றுமே விரைவாய்

மனிதர்களின் வாழ்வும் மரங்களின் பயனும்
பிணைந்த கதையறிவாய் பேணிவளர்த்திடுவாய்
கட்டிலிற் பிறந்து தொட்டிலில் வளர்ந்தாய்
காய்கனியுடனே தானியம் புசித்தாய்

மூலிகைகள் ஆயிரமாய் சூழ வளர்ந்திருந்தால்
நாசிவழி புகும் காற்று நற்பிராணனாய் பவனிவரும்
மாசகற்றும் பணியோடு பிணியகற்றும் அருமருந்தாம்
வாசலிலே நகைக்கின்றாள் அரசியாம் துளசியவள்.

திருமதி. ரமணி துரைசிங்கம்
மாதகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுவை ஒழிப்போம் மதியை வளர்ப்போம்

சிந்தனையின் பரிணமாப் படி வந்தால்
மனித மனம் ஏதாவதொரு தேடலை நாடி
மிதவை மதுவுக்குள் மண்டியிட்டுள்ளது.

உடலுக்குள் மதுவையேற்றி
உளத்தை உரசித் தேய்க்கும் பாதகத்தை
தனக்குத் தானே தீ மூட்டும் ரசனையை
உபாதையை இன்பமென ஏற்கும்
மனோபாவத்தை சுகானுபவமென்பதா?
செங்கோணமாய்ப் பிறந்து
விரிகோணமாய் விசாலிக்க வேண்டிய சிந்தனை

மதுப் பொருளுக்கு அடிமையான போது
கூர்ங்கோணமாய் ஒடுங்கி
தனக்குத்தானே எதிரியாய் மாறி
ஏங்கி......... இரந்து இழக்க முடியாததைத் தொலைத்து

தன் சமூக அந்தஸ்தை காலால் மிதித்தல்
எங்கு யாரால் ஜீரணிக்க முடிகிறது
அரச அனுமதி வாங்கிய போதையும்
தேசிய வருமான நலனேயொழிய
பூரிக்கும் வாழ்வை வழங்குவதல்ல

போதையில் நஞ்சைக் கலந்து ஆதாயம் தேடிய
கொஞ்சப் பேர் விசாரணைக் கூண்டில் தப்பலாம்
குடித்துச் செத்த குடும்பங்கள் தளைத்ததா
மூளையின் மயிர்த்துளைக் குழாய்களில் வேகமாய்
உதைக்கும் ரத்தத்தால் விரிந்த பின் பழைய
நிலைக்குச் செயற்படும் வரையும்
சோர்ந்த, களைத்து, துடித்து நாள் ஏகர
உடலும் நடுங்கி கல்லீரற் கலங்கள்
அழிந்து வீங்கி பழுத்துச் சாதல் தேவையா?
கெட்டதைப் பழகுதல் மிக மிக எளிது
நல்லவை மறத்தலும் அதிலம் எளிதே!

எம். தயாளினி, கே. அமுதா
யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுத்துக யுத்தம்!

கண்ணீரும் கடல்நீராய் குடாநாட்டை விழுங்கும் - பெரு
வெள்ளமாய் எம்மவர் விழிகளில் நீரோடும்
தண்மதி நிலாவொளியில் தாரமுடன் குழந்தைகளும்
நிம்மதி கெட்டின்று நடுத்தெருவில் நிற்கின்றோம்.

எறிகணையின் ஒலிகேட்டு ஏங்கியழும் குழவி நிலை
புரியாமல் அந்நேரம் புறுபுறுக்கும் கிழவி
மரியாதை இல்லாத இந்த மானிடப்பிறவி
சரியான வழியதற்கு ஆகிடலாம் துறவி

அண்ணனும் தம்பியும் அடிபடும் நிலமை அட
எண்ணிப்பார் இது எத்தனையாவது தடவை?
உண்மையைச் சொன்னால் ஊரறிந்த சிறுமை
அன்னையழுகின்றாள் ஆராற்றுவார் அவளை?

இனவாதம் மதவாதம் இது ஈனமான பிடிவாதம் - வேண்டும்
மனங்களில் "எல்லோரும் மாந்தா;" என்ற நலலெண்ணம்
கனமான மனதுடன் கண்களில் நீருடன் இடம்பெயரும்
இனமான எங்களிற்கும் அந்நாளில் விடிவுவரும்

திசை சொல்லிக் கூறாக்கி நாட்டை ஆளும் வர்க்கம் அதனால்
தசை மட்டும் எஞ்சப் பல உயிர் போனது சொர்க்கம்
வசை சொல்ல நாளை வரலாறு காத்திருக்கும்
நிலை வேண்டாம் ஐயகோ நிறுத்துக இவ் யுத்தம்

("வலம்புரி" யிலிருந்
எடுக்கப்பட்டது)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரங்களே மனிதகுலத்தின் செல்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரூட்டின் பணி

போரூட் மக்களின் வாழ்க்கை நிலைமைகளை விருத்தி செய்யப்பாடுபடுகின்றது,

போரூட் கஷ்டப்பட்ட மக்களின் சமுதாய பொருளாதார நிலைமையை விருத்தி செய்யவும்,

மது போதைப்பொருள் பிரச்சனைகளுக்கு எதிராகப் போராடவும்,

சமூகங்களுக்கிடையே சமாதானத்தையும் இணக்கத்தையும் வளர்க்கவும்,

உள்ளூர்க் குழுக்களையும் ஸ்தாபனங்களையும் கட்டியமைத்து வலுப்படுத்த ஊக்கம் அளிக்கிறது,

போரூட் அதேவேளையில் தேவை ஏற்படும் காலங்களில் மனிதாபிமான உதவிகளை வழங்குகிறது.

# கிராம அரசை உருவாக்குவோம் !

**அன்றும் உண்மை**

வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயர குடி உயரும்
குடி உயர கோல் (நீதி) உயரும்
கோல் உயர கோன் (அரசு) உயர்வான்

**என்றும் உண்மை**

சேமிப்பு உயர முதலீடு உயரும்
முதலீடு உயர உற்பத்தி உயரும்
உற்பத்தி உயர வருமானம் உயரும்
வருமானம் உயர குடும்ப நிலை உயரும்
குடும்பநிலை உயர சமூக (நீதி)ம் உயரும்
சமூகம் உயர சங்கம் (அரசு) உயரும்

எம்.எவ். மரிக்கார்
போரூட் பிரதி வதிவிடப்பிரதிநிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரூட் அபிவிருத்தி திட்டங்கள்




அன்பளிப்பு

10/=

போரூட் யாழ் மேற்கு திட்டத்தால் வெளியிடப்பட்டது.

ஹரிகணேஷ் ஓ(f)செற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org